உ

சிவமயம்

திருச்செந்திலாண்டவன் துணை

மலர் 19 | பிலவங்க ௵ மாசித் திங்கள் 1-ம் உ [13-2-68] | இதழ்-2

முத்துக்குமார சுவாமி பிள்ளைத்தமிழ்

உரைநடை

பாலகவி வயினாகரம்

திரு. வே. இராமநாதன் செட்டியார் அவர்கள்,

தேவகோட்டை.

(மலர் 19. இதழ் 1-ன் தொடர்ச்சி)

கள்ளவிழ் நறுங்கொடிகள் கமுகிற் படர்ந்துபூங்

கற்பகத் தும்படர்தலாற்

காமன் பெருஞ்செல்வ மன்னவர்கள் முழுமியக்

கமுகின் கழுத்தில்யாத்த

ஒள்ளொளிய செம்மணிப் பொன்னூசல் பன்முறை

உதைந்தாட வாடுந்தொறும்

ஒண்கமு கொடுந்துணர்ப் பைங்கற் பகக்காடும்

ஒக்கவசை யத்தலையசைத்

தள்ளிலை யலங்கல்வே லெம்பிரா னைப்பாடி
ஆடுகின் ருரெனத்தாம்
அலர்மாரி பொழிவபோ லங்கற் பகத்தெய்வம்
அம்பொன்மலர் மாரிதூர்க்கும்
தெள்ளுதமிழ் விரிபுனற் காவிரித் திருநாட
சிறுதே ருருட்டியருளே
திருவளர வளர்கந்த புரிவள ரிளங்குமர
சிறுதே ருருட்டியருளே. 100

தேன் சிந்துகின்ற நல்ல பூங்கொடிகள் கமுகு மரங்களிலே படர்ந்து பூக்களையுடைய கற்பக மரத்திலும் சென்று படர்தலினால், மன்மதனது பெருஞ் செல்வம் போன்றவர்களாகிய மங்கையர்கள் ஒன்று சேர்ந்து, அந்தக் கமுக மரத்தின் கொம்புகளில் கட்டிய பேரொளியையுடைய செம்மணிகள் பதித்த பொன்னுலாகிய ஊசலைப் பல தடவை உதைந்தாட, அங்ஙனம் ஆடுந்தோறும் ஒள்ளிய கமுகுடன் பூங்கொத்துக்களையுடைய பசிய கற்பகச் சோலையும் ஒப்ப அசையும்படி தலையசைத்து மிகுதியான இலைகளுடன் கூடிய மாலையை அணிந்த வேற்படைக் கடவுளைப் பாடி அம்மங்கையர்கள் ஆடுகின்றார்களென்று எண்ணிப் பூமழை பொழிவதைப் போல கற்பகமாகிய தெய்வம் அழகிய பொன்மலர் மழையைப் பொழிகின்ற தெள்ளிய தமிழ் விரிந்த நீரையுடைய காவிரித் திருநாட்டை யுடையவனே! சிறு தேரையுருட்டியருளுவாயாக. எல்லாச் செல்வங்களும் பெரும்படி தழைக்கின்ற கந்தபுரியில் எழுந்தருளியுள்ள இளங்குமரனே! சிறு தேரை யுருட்டியருளுவாயாக.

வாராட்டு தடமுலைப் பாலொழுகி வழிவதென
மணிமுறுவ னிலவுகாலும்
மழலைவாய் முத்துண்டு முச்சிமோந் துந்திரு
மடித்தலத் தினிலிருத்திப்
பாராட்டி யுந்தமது கண்மணிப் பாவைநின்
படிவமா கக்காட்டியிப்
பாலரொடும் விளையா டெனப்பணித் துந்தங்கள்
பார்வைகளி யாடச்செயும்

தாராட்டு மதிமுடித் தீராத வினை தீர்த்த
தம்பிரா னுந்தம்பிரான்
தழலுருவி லொருபாதி குளிரவொரு புறநின்ற
தையலு யகியும்வைத்துச்
சீராட்டி விளையாடு சேனு பதிக்கடவுள்
சிறுதே ருருட்டியருளே
திருவளர வளர்கந்த புரிவன ரிளங்குமர
சிறுதே ருருட்டியருளே. 101

கச்சையணிந்த பெரிய கொங்கைகளிலிருந்து பாலொழுகி வழிவது போல அழகிய புன்முறுவல், நிலவொளியைக் கக்குகின்ற மழலை மொழியையுடைய வாய் முத்தத்தைக் கொண்டும் உச்சி மோந்தும் அழகிய மடித்தலத்தில் வைத்துப் பாராட்டியும் தமது கண்மணியிலுள்ள பாவையை உனது வடிவமாகக் காட்டி வீரவாகு முதலிய இப்பாலர்களுடன் விளையாடுக எனப் பணித்தும் தங்களது நோக்கம் களிப்புறும்படி செய்கின்ற திங்கள் மாலையைச் சூடிய முடியையுடைய தீராத வினை தீர்த்த தம்பிரானாகிய வைத்தியநாதக் கடவுளும், அவரது தீ வண்ணத் திருமேனியில் ஒரு பாதி குளிரும்படி இடப்பாதியில் இடங்கொண்ட தையல் நாயகியும் சீராட்டி வைத்து விளையாடுகின்ற தேவசேனாபதிக் கடவுளே! சிறு தேரை யுருட்டி யருளுவாயாக. எல்லாச் செல்வங்களும் பெருகும்படி தழைக்கின்ற கந்த புரியில் எழுந்தருளியுள்ள இளங்குமரனே! சிறு தேரை யுருட்டி யருளுவாயாக.

முற்றிற்று.

துறவியர்தம் தூய உணவு

வித்துவான் மூ. இராமகிருஷ்ணன் அவர்கள்,
உலக சாந்தி ஆசிரமம், சென்னை - 19.

துறப்பதிலே இன்பம் காண்பது நம் பாரதப் பண்பு. சேர்ப்பதிலே இன்பம் காண்பது மேல் நாட்டார் இயல்பு.

> **"துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து**
> **இறந்தாரை எண்ணிக்கொண்டற்று"**

என்றார் வள்ளுவர் பெருமான். துறவியர்தம் பெருமை சொல்லவும் கூடுமோ?

நாடாண்ட மன்னரைக் குறித்து நாம் அறிய வேண்டின் வரலாற்று நூல்களைத் துருவ வேண்டும். ஆனால் சிறந்த துறவியரையோ நம் மக்கள் என்றுமே மறந்ததில்லை - மறக்கிறதில்லை - மறக்கப்போவதுமில்லை.

மனிதன் சேர்ப்பதில் என்று இன்பம் காணத் தொடங்கினானோ அன்றே அவனது உள்ளத்தில் பொறாமை, பகை, சினம், பேராசை முதலிய தீய பண்புகள் எல்லாம் அவனிடம் வளரலாயின. கீதையில் கண்ணபிரான் அருளிய வண்ணம் இடையிடையே உலகில் துறவியர் தோன்றி, துறவின் பெருமையை மக்களுக்கு எடுத்தியம்பி வருகின்றனர்.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாயினும் புத்தரை இவ்வுலகு மறக்கவில்லை; இயேசுவின் பெருமை இன்றும் வளர்ந்து கொண்டே யிருக்கிறது. ஆதி சங்கராச்சாரியார், குமர குருபரர், குருஞான சம்பந்தர், இராம கிருஷ்ண பரமஹம்சர், விவேகானந்தர், இராமலிங்க அடிகள், ரமண மகரிஷி போன்ற எண்ணற்ற பெரியார்கள் இன்றும் தெய்வமாக மதிக்கப் பெற்றுப்போற்றப்படுகின்றனர்.

தூய துறவியர்கள் மல்கிய இப்பாரத நாட்டில் இன்று அவர்கள் அருகி வரக் காரணமென்ன? அறிய வேண்டிய மிக முக்கியமான கேள்வி.

அன்றைய துறவியர்தம் உணவு முறை வேறு. இன்று துறவு பூண்டோரது உணவு முறை வேறு. பண்டு துறவி

யர்கள் இதம்தரும் இனிய தென்றல்காற்றும், தேனினும் இனிய சுவை மிகு சுனை நீரும், உள்ளத்திற்கும் உடலுக்கும் ஊட்டம் தரும் உயரிய நறுங்கனிகளும் நிறைந்த மலைச் சோலைகளிலே உறைந்தனர். அதிகாலையில் நீராடல், யோகாசனம், பிராணுயாமம், தியானம் முதலியன செய்தல், பின் கனிந்த கனிகளை மட்டுமே புசித்தல், அரிய நற்சீடருக்கு தம் உள்ளத்தில் மலர்ந்த உயர்ந்த ஞானக் கருவூலத்தை வழங்குதல் போன்ற பணிகளையே அவர்கள் ஆற்றி வந்தனர்.

அவர்கள் வாழ்ந்த இயற்கைச் சூழல்கள், அவர்களை இறையுணர்வு மிக்கவராய் விளங்கச் செய்தன; ஞானியராக்கின. அவர்கள் உண்டு வந்த கனியுணவு அவர்களின் உயர்ந்த புலனடக்கத்திற்கு, தூய நல்லுணர்விற்குப் பெரிதும் துணையாக இருந்தன.

கனி உணவு, நமது ஐந்து புலன்களையும் நன்கு கட்டுப் படுத்தி, தூய இறை நெறியில் நம்மைச் சேர்க்கின்றது. இறைவன், கதிரவனுகிய பெரிய அடுப்பினை அமைத்து உலகிலுள்ள எல்லா உயிர்களுக்கும் சமைத்து, கனிகளாகவும் காய்களாகவும், இலை தழைகளாகவும் தருகின்றுன்.

அரிசி, கோதுமை முதலிய தானியங்கள்,கொரிக்கும் உயிரினங்களான பறவைகள், எலி போன்றவற்றிற்காகவே இறைவன் படைத்துள்ளார். சமையலுக்கு உதவும் காய்கறிகளோ, அற்பமான புழுக்கள் உண்டு வாழ்வதற்காகப் படைக்கப்பட்டவை. இந்த அற்ப உணவுப் பொருள்களையும் மனிதன் நேரடியாக இறைவன் படைத்துத் தந்த அவ்வண்ணமே கூட உண்ணமுடியாமல், மேலும் நெருப்பில் சமைத்து, வதைத்து, வறுத்து,பொசுக்கி, சுட்டு,அவித்து,கறுக்கி இவ்வாறெல்லாம் கெடுத்து, சிதைத்து உண்கிருன். இவ்வாறு உண்பவனுக்கு எங்கே உயர்ந்த ஆன்மீக பக்குவநிலை எளிதில் கைவரமுடியும்?

குழந்தைக்குத் தாய்ப்பால் உரியது. தாய்ப்பாலை மறந்த பின் மனிதனுக்குப் பால் வேண்டுவதில்லை. உலகில் எவ்வுயிரும் கன்று நிலையில் பால் அருந்துமே யன்றி, வளர்ந்த நிலையில் அவை பால் அருந்துவதில்லை, என்பதை நாம் அறிவோம். பசு முதலிய விலங்கினங்களின் பால், அவற்றின் கன்றுகளுக்காகச் சுரப்பவை. சாதாரண கன்றுகளை வளர்ப்

பதற்குப் போதுமான ஆற்றலை உடையதாகவுள்ள அப்பால், உயர்ந்த நிலையினை அடைய வேண்டிய மனிதனுக்கு எவ்வாறு உணவாக முடியும் ?

குழந்தைப் பருவம் நீங்கிய பின்னர் பாலையோ அல்லது பால்தரும் பொருள்களையோ அருந்தினால் நம்புலன்கள் எளிதில் திசைமாறத் தொடங்குகின்றன. செறியாமை, மலச்சிக்கல் போன்றவற்றைப் பாலும், நெய்யும் எளிதில் உண்டாக்குவன. செறியாமையும் மலச்சிக்கலுமே நோய்களின் பெற்றோர் என்பதை யாரும் அறிவர். நோய்கொண்ட உடம்பில் தூய துறவு உள்ளம் எங்ஙனம் வாய்க்கும்?

நெருப்பின் உதவியினால் மனிதன் என்று சமைக்க முற்பட்டானோ, அன்றிலிருந்தே அவன் இறைத்தன்மையிலிருந்து விலகிச்சென்று, பாழ் நிலையை எய்தலானான். அவனது புலன்கள் திசைமாறி அவனைக்கண்டபடி கெடுத்து, விலங்கு களினும் கொடியவனாக ஆக்கிவிட்டன. சமையல் உணவே அவனைப் பால் அருந்த வேண்டிய நிலைக்குக் கொண்டுபோய் விட்டது.

எனவே, அறவே சமையலை விடுத்து, பால்படு பொருள்களையும் நீக்கி, மூன்று வேளையோ, இருவேளையோ தேவைபட்டாங்கு கனிகளை மட்டுமே உண்ணவேண்டும். அருந்துவதற்குத் தூய, குளிர்ந்த நீரினும் சிறந்தது வேறு ஒன்றுமில்லை. இவையே துறவியர்தம் தூய உணவாகும். இவ்வுணவு துறவியருக்கு மட்டுமன்றி, நோயற்ற, மருந்தற்ற, உயர்ந்த ஞானவாழ்வு - வளவாழ்வு. வள்ளுவர்கண்ட உயர் வாழ்வு வாழ விரும்பும் அனைவருக்கும் உரியதாகும்.

கனிவகைகளுள் தெங்கங்கனியே- தேங்காயே மிகச் சிறந்தது. பண்டு நம்முன்னோர்கள் தேங்காய், வாழைப்பழம் இவற்றை மட்டுமே உண்டு வாழ்ந்து வளம் கண்டனர் என்பதற்குச் சான்று, இன்றும் நாம் கோவிலுக்குச் செல்லும் பொழுது தேங்காய், பழங்களை மட்டுமே இறைவனுக்குப் படைக்க எடுத்துச் செல்கிறோம்.

இவ்வுணர்வால்தான் சென்னையை அடுத்த திருவொற்றியூரில் உலக சாந்தி ஆசிரமம் ஒன்றை நிறுவி அங்கு கடந்த மூன்று ஆண்டுகளாக சமையல் உணவை அறவே விடுத்து

கனிகாய்களை மட்டுமே உண்டு வருகிறேன். சைவமாகவே சமையல் செய்து உண்டபோது எளிதில் கட்டுப்படாது ஊச லாடிக்கொண்டிருந்த என் உள்ளம் மூன்று வேளையும் கனி உணவிற்குப் பழகிய பின்னர் எளிதில் நிலைப்பட்டது. தூய தியானநிலை எளிதில் கைவரலாயிற்று. அனைத்து உயிர்களிலும் நம்மையும், நம்மில் அனைத்து உயிர்களையும் காணும் உள்ள பக்குவநிலை எளிதில் வந்தெய்தியது.

மூன்று வேளையோ அல்லது இருவேளையோ தேங்காய், வாழைப்பழங்கள் இவற்றை மட்டுமே, நானும், என் குடும்பத்தவரும், என்னுடன் சேர்ந்த பலரும் உண்கிறோம். எப்போதாவது பருவங்களில் மா, பலா, கொய்யா முதலியவை மலிவாக வரும்பொழுது அவற்றையும் பயன்படுத்துகிறோம். நான், அவர்களினும் குறிப்பாக தேங்காயை மட்டுமே முழு உணவாகக் கொள்ளும்போது கிடைத்த நலன்களும் மன ஒருமையும் மிகுதியாகும். பால், பால்படுபொருள்கள், சமையலுக்கு உதவும் தானியங்கள், காய்கறிகள் ஆகிய எவற்றையும் நாங்கள் பயன்படுத்துவதில்லை. தேங்காயை மட்டுமே நான் மிகுதியும் உண்பதால், என் தலைக்கோ, உடலுக்கோ சிறிதும் எண்ணெய் தேவைப்படவில்லை. எனவே எண்ணெயும் அறவே தேவையில்லை. உடம்பில் எண்ணெய் படாமையாலும், கனி உணவையே உண்பதாலும் என் ஆடைகளுக்குச் சலவையோ, 'சோப்போ' தேவைப்படவில்லை. எனவே நான் அவற்றைப் பயன்படுத்துவதில்லை. நாளும் துவைத்துக் கட்டும் அவ்வாடைகளோடு பள்ளிசென்று பாடம் கற்பிப்பதில் எனக்குச் சிரமம் ஒன்றுமில்லை.

தென்னை மரங்கள் நிறைந்த நீர்ச்சுரப்புடைய மலைச் சாரல் ஒன்றில் ஆசிரமம் ஒன்றை அமைத்து, அதன் வழி, கனி உணவின் மேன்மையினை உலகிற்கு எடுத்துணர்த்தி, மக்களை வாழ்வாங்கு வாழத்தூண்டி, என்றுமே கனி உணவில் வாழ்ந்துவர விழைகிறேன். இறையுணர்வில் தோய்ந்து எப்பொழுதும் இன்புற்றிருக்க கனி உணவு மிகச் சிறந்த வாய்ப்பாகும். உண்பீர் கனி உணவே! வாழ்வீர் வள வாழ்வே!

உயிருண்ணிப்பத்து*

திரு. K. M. வேங்கடராமையா அவர்கள், M. A., B. O. L.,
திருப்பனந்தாள்.

திருப்பெருந்துறையில் அருளியவை

சிவபுராணம், கீர்த்தித்திருவகவல், திருவண்டப்பகுதி, போற்றித்திருவகவல், திருச்சதகம் உட்பட மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருவாசகம் 51 பதிகங்கள் (அல்லது தலைப்புக்களில்) **திருப்பெருந்துறைத் திருவாசகம்** இருபது பதிகங்களாக அமைந்துள்ளன. அவற்றுள் **சிவபுராணம் 146** வரிகளையுடையது; **திருச்சதகம் 100** திருப்பாடல்களைக் கொண்டது; எஞ்சியவை திருப்புள்ளியெழுச்சி, செத்திலாப் பத்து, அடைக்கலப்பத்து, ஆசைப்பத்து, அதிசயப்பத்து, புணர்ச்சிப்பத்து, வாழாப்பத்து, அருட்பத்து, பிரார்த்தனைப் பத்து, குழைத்தபத்து, **உயிருண்ணிப்பத்து**, திருப்பாண்டிப் பதிகம், திருவேசறவு, அற்புதப்பத்து, சென்னிப்பத்து. திருவார்த்தை, திருவெண்பா, பண்டாயநான்மறை-ஆகப்பதிகம் பதினெட்டுக்குத் திருவாசகம் 179 ஆகும்.

உயிருண்ணிப்பத்து

உயிருண்ணிப்பத்து என்பது **சிவாநந்தமேலிடுதல்** என்ற குறிப்பையுடையது. இக்குறிப்புக்கு **நேயமேலிடுதல்** என்று பொருள்தரப்பெறும். அதாவது யான் எனது என்னும் செருக்கு அற்றுத் தூய அருள் ஒளியில் அடங்கிய ஆன்மா இன்பவடிவாய் இருத்தல் ஆகும். **உயிருண்ணி** என்பது உயிரையுண்ட பொருள் என்று பொருள்படும். எனவே உயிர்தன் தன்மைகெட்டு இன்புறும்நிலை இப்பத்தில் கூறப்

---

* *திருவாவடுதுறை ஆதீன மகாசன்னிதானம் அவர்கள் திருமுன்னிலையில் எடுத்தணிவயலில் நிகழ்ந்த திருவாசகவிழாவில் 1965 ஜூன்மீ 28உ நிகழ்த்தப்பெற்ற சொற்பொழிவின் சுருக்கம்.*

பெற்றது எனலாம். ஆகவே இப்பத்தில், இறைவன்நிலையும், உயிரின்நிலையும், அது தன்மைகெட்டு இன்புறுதலும் பிறவும் பேசப்படும்.

பதிமுதுநிலை

இப்பத்தில் இறைவன், உமைபாகன் - விடைப்பாகன் - வினைக்கேடன் - சடைமுடியன் - அரன் - நீற்றுர்தருதிருமேனி - நின்மலன் என்ற தொடர்களில் குறிக்கப் பெற்றுள்ளார்.

இறைவனோடு பிரிவிலாதவர் தேவியார். தேவியாரே உயிர்களைப் பிறவித்துன்பத்தினின்று நீக்கிச் சிவத்தோடு சேர்த்துப் பேரின்பமடையச் செய்வர்; ஆகவே இறைவனை **உமைபாகன்** என்றார். "அரிதருகண்ணியாளை ஒருபாகமாக அருள்காரணத்தில்வருவர்" என்றார் அப்பரும்.

உமைபாகரே வினைகளைக் கெடுக்கவல்லவர். ஆகலின் அவர் **வினைக்கேடன்** எனப்பெற்றார். வினைக்கேடன் என்பது வினைகளைக் கெடுப்பவன் என்று பொருள்படும். **அரன்** என்றதுவும் இதனைக் குறிக்கவே ஆகும்.

சடைமுடியான் என்றது இறைவனது பேராற்றலையும் அருள்செயும் இயல்பினையும் விளக்குவதாகும்.

தன்னைத்தொழுவார் வல்வினை கெட்டொழியுமாறுஇறைவன் பூசியுள்ளது நீறு. புன்மை தவிர்ப்பது நீறு-அவலம் அறுப்பது நீறு-பாவம் அறுப்பது நீறு-என்றார் சீகாழிப் பெருவாழ்வாகிய திருஞானசம்பந்தரும். ஆகவே. வல்வினை கெடச் செய்தலின், இறைவன் **நீற்றுர்தருதிருமேனி**யர் எனப்பெற்றார்.

நின்மலன் என்றது இயல்பாகவே பாசங்களின் நீங்கியிருத்தலாகிய எண்குணங்களுள் ஒன்றைக்குறிக்கும். நின்மலனாகிய இறைவனே நம் வல்வினைகளைக் கெடுப்பர் என்பது கருத்து.

உயிரவைநிலை

உயிர்களது நிலையும் இப்பதிகத்துக் கூறப்பட்டுள்ளது. உயிர் தனித்து நில்லாது சார்ந்ததன் வண்ணமாவது. "**பற்றுங்கு அவையற்றீர்**" என்ற பகுதி, 'உயிர் யான் எனது என்ற பற்றுக்களையுடையதாயிருந்தது' என்பதை யறிவிக்கின்றது.

பற்று ஆங்கு அவை அறின், ஆன்மா ஆன்மசுத்தியும் சிவதரிசனமும் பெற்றதாகின்றது. பற்று உள்ள பொழுது இருந்த நிலையை, **"ஊன்பாவிய உடலைச்சுமந்து அடவிமரம் ஆனேன்"** என்றார் மாணிக்கவாசகர். **அடவிமரம்** என்றது காட்டுமரம். அது பழமரம் ஆயினும் பயன்படாதொழிதல்போல, நானும் பயன்படாதொழிந்தேன் என்றார். காட்டுமரம் எவ்வெவற்றுக்கோ பயன்படுதல் போலத் தானும் எவ்வெவற்றுக்கோ பயன்பட்டு வருந்திய நிலையும் குறித்தார்.

இருள் மல நிலை

உயிர் இறைவனை யடையாது தடுக்கும் மலத்தின் நிலையும் இப்பாடல்களுள் கூறப்பட்டது. **"கடலின் திரையது போல் வரு கலக்க மலம்"** என்றுள்ள பகுதி ஆணவ மலத்தின் நிலையைக் கூறும். மூலமலமாகிய ஆணவமலமே எல்லாக் கேடுகளுக்கும் காரணம் ஆவது. இம்மலமே கடலில் எழும் அலைகலைகளைப் போல இடையீடின்றித் துன்பங்களை விளைவிப்பது.

அருளது நிலை

இத்தகைய மலத்தை அறுக்கும் பொருட்டு, இறைவனோடு பிரிவிலாப் பராசக்தி, மலப்பிணியை நீக்குவார். இதனையே, **"கலக்கமலம் அறுத்து, என் உடலும் என் உயிரும் புகுந்து ஒழியா வண்ணம் நிறைந்தான்"** என்றார். **"ஊனூர் உடல் புகுந்தான் உயிர்கலந்தான் உளம் பிரியான்"** என்றமையும், "என்பின்புரை உருக்கி மனத்தகத்தான் கண்ணினத்தான் மறுமாற்றத்திடையானே" என்றமையும் அருளது நிலையையே குறிப்பினவாகும்.

இன்புறு நிலை

இங்ஙனம் யான் எனது என்ற பற்றற்றுப் பற்றற்றான் பற்றினைப் பற்றித் திருவடி நிலையில் அடங்கிப் பேரின்பம் அடைதல், இப்பத்தில் பலவிடங்களில் கூறப்பட்டுள்ளது.

"எனை நான் என்பதறியேன் பகலிரவாவது மறியேன்" என்பது தற்போதம் ஒழிந்தமையால் - அருள் ஒளியில் ஒடுங்கியமையால் - கூறப்பட்டது. இங்ஙனம் தற்போதம்

ஒழிந்து சிவானந்தத்தை நுகர்தலை பின்வரும் திருவாசகத்தில் கூறப்பெற்றது :-

கோற்றேன் எனக் கென்கோ குரைகடல்வாய் அமுதென்கோ
ஆற்றேன் எங்கள் அரனே அருமருந்தே என தரசே
சேற்றார் வயல் புடைசூழ்தரு திருப்பெருந்துறை யுறையும்
நீற்றார்தரு திருமேனி நின்மலனே யுனையானே.''

அணைந்தோர் தன்மை

சிவபிரான் திருவடி நீழலை அடைந்த சிவஞானிகள் எந் நாளும் களித்து எந்நாளும் இறு மாந்திருப்பார்கள். இதனைச்

''செந்நாவலர் பரசும் புகழ்த் திருப் பெருந்துறை யுறைவாய்
எந்நாட் களித்து எந்நாள் இறு மாக்கேன் இனியானே''

என்றார் வாத வூரடிகள். இங்கு **இறுமாத்தல்** என்பது,

''எங்கும்யாம் ஒருவர்க்கும் எளியோம் அல்லோம்
யாமார்க்கும் மேலானோம் என்று இறுமாப் பெய்தித்
திங்கள் முடியார் அடியார் அடியோம் என்று
திரிந்திடுவர் சிவஞானச் செய்தி யுடை யோரே''

என்று சிவஞான சித்தியில் கூறிய வாறு, சிவானந்தத்து அழுந்தி இடையறுப் பேரின்பம் துய்த்தலாகும். இதனையே அப்பரும்,

''இறுமாந் திருப்பன் கொலோ ஈசன்-பல்கணத் தெண்ணப்பட்டு
சிறுமான் ஏந்திதன் சேவடிக் கீழ்ச்சென் றங்கு
இறுமாந் திருப்பன் கொலோ'' என்றருளினார்.

சிவஞான போதம் 12-ம் சூத்திரத்தில் ஜீவன் முத்தர்கள் எஞ்சி நின்ற பிராரத்தவினை தாக்காதிருத்தற்குரிய வழிகள் கூறப்பட்டுள்ளது. அவற்றுள் ஒன்று ''**அன்பரொடு மருவதல்**'' ஆகும். இதனைப் பின்வரும் திருவாசகம் நன்கு விளக்கு கின்றது:-

பற்றாங்கவை யற்றீர் பற்றும் பற்றாங்கது பற்றி
நற்றாங்கதி யடைவோம் எனில் கெடுவீர் ஓடிவம்மின்
தெற்றார் சடை முடியான் மன்னு திருப்பெருந்துறை யிறைசேர்
கற்றாங்கு அவன் கழல் பேணினரொடும் கூடுமின் கலந்தே.

இவர்கள் புகழை வேண்டாதவர்கள்; புகழ் யான் எனது என்னும் செருக்கை விளைவிக்கும்.

இவர் செல்வத்தை வேண்டார்; பொருள் உலக இன்பத்திலேயே ஈடுபடுத்தும் ஆகலின்.

இவர் மண்ணுலகத்தை விரும்பார்; விண்ணுலகத்தையும் விரும்பார்; இவ்விரண்டும் அழிவனவே.

இவர் பிறப்பும் வேண்டார்; இறப்பும் வேண்டார். இவை மாறி மாறி வந்து பிறப்புக்குக் காரணமாகவே முடியும். அன்றியும் பிஞ்ஞகன் தாள் மறக்கும் பிறப்பு எய்தலும் கூடும் ஆகலின், இறப்பும் வேண்டாதவர் ஆயினர்.

இவர் சிவனே முழுமுதற் கடவுள் என்று கொள்ளாதவரோடு விரவுதல் ஒழிவர்; அல்லாதார் அஞ்ஞானம் புகட்டுவராகலின்.

இவர் இறைவனது திருவடிகளையே பற்றியிருப்பர்; பிறவிப்பெருங்கடல் நீந்தலாம் ஆகலின்.

அத்திருவடிகளைச் சிக்கெனப் பிடித்துப் புறம்போக விடார்கள்.

சிவஞானச் செய்தியுடையோர்களின் இச் செயல்களெல்லாம் தொகுத்துரைப்பது பின்வரும் திருவாசகம் :-

வேண்டேன் புகழ்; வேண்டேன் செல்வம்
வேண்டேன் மண்ணும் விண்ணும்
வேண்டேன் பிறப்பு இறப்பு; சிவம்
வேண்டார்தமை நாளும்
தீண்டேன்; சென்று சேர்ந்தேன் மன்னு
திருப்பெருந்துறை இறைதாள்
பூண்டேன்; புறம் போகேன்; இனிப்
புறம்போக லொட் டேனே.

திருமந்திரம் TIRUMANTIRAM

ஆறாந்தந்திரம் Tantra the Sixth

டாக்டர், திரு. பா. நடராசன் அவர்கள் M. A., D. Litt.,

(மலர் 19, இதழ் 1—ன் தொடர்ச்சி)

திருமூலர் பிறப்பொழித்தவாறு
How Tirumular ends the birth cycle

16. அறிந்துணர்ந் தேனிவ் வகலிட முற்றுஞ்
செறிந்துணர்ந் தோதித் திருவருள் பெற்றேன்
மறந்தொழிந் தேன்மதி மாண்டவர் வாழ்க்கை
பிறந்தொழிந் தேனிப் பிறவியை நானே.

All this space infinite
I cognised and realised;
Adoring with devotion replete
I received His Grace Divine
Now am I past all remembrance of the Ignorant Exceeding
For even have I bidden adieu to birth recurring.

எல்லையற்ற வெளிப்பரப்பினை யெல்லாம் ஞானத்தாலுணர்ந்துகொண்டேன். காதலாகி இறைவனை ஓதி, அவன் அருளைப்பெற்றேன். அறிவற்றார் வாழ்க்கையை அறவே மறந்துவிட்டேன். இப்பிறப்பிலேயே பிறவித்தளையை அறுத்துக்கொண்டேன்.

திருமூலர் இறைவனைக் கண்டவாறு
How Tirumular met the Lord

17. தரிக்கின்ற பல்லுயிர்க் கெல்லாந் தலைவ
னிருக்கின்ற தன்மையை யேது முணரார்
பிரிக்கின்ற விந்தப் பிணக்கறுத் தெல்லாங்
கருக்கொண்ட வீசனைக் கண்டு கொண்டேனே.

He is the Lord of all living creation
Yet naught they know of state existent;
I cut this tangle that separated Him from me,
And lo! I met the Lord. the seed of all causul
phenomenon.

வாழ்கின்ற பல்லுயிர்க்கெல்லாம் அவன் தலைவனாக இருக்கின்றான். ஆயினும் அவன் இத்தன்மையனாக இருக்கின்றான் என்று எவ்வகையிலும் உணராதிருக்கின்றனர். என்னையும் அவனையும் நான் அவன் என்ற பேதத்தில் பிரித்து வைத்திருக்கும் இந்தத் தளையை அறுத்தெறிந்தேன். உடனே யாவற்றிற்கும் முதற்காரணனாக இருக்கும் இறைவனைக் கண்டு கொண்டேன்!

திருவடிப்பேறு
Grace of Guru's Feet

18. இசைந்தெழும் அன்பில்; எழுந்தபடியே
பசைந்தெழும் ஈசரைப் பாசத்துள் ஏகச்
சிவந்த குருவந்து சென்னிகை வைக்க
உவந்த குருபதம் உள்ளத் துவந்ததே.

Rise in loving praise of the Lord
And having risen, in piety melt for Him;
Then the godly Guru cometh.
— He who had scorned pasa's fetters—
And lays his hand on thine head,
And lo! in thee welleth up the rapturous Grace of his feet

பொங்கிய அன்போடு இறைவனைப் பாடித் துதியுங்கள்; துதித்தவாறே நெக்குருகி நில்லுங்கள்; அப்பொழுது பாசவலையுளே ஏக மறுத்த குருபரன் வருவான்; வந்து, உம் தலைமீது தன் கையை வைப்பான். வைத்ததும், உம்முளே குரு அடியாகிய அவன் திருவருள் இன்பம் புகுந்து நிறையும்.

குறிப்பு. வரி *உவந்தது — தேற்றம் பற்றிய இறந்தகாலம்.*

அடிப்பேறே முடிப்பேறு
Grace of Feet is Kingdom won

19. தாடந்த போதே தலைதந்த எம்மிறை
வாடந்த ஞான வலியையுந் தந்திட்டு
வீடந்த மின்றியே யாள்கென விட்டருட்
பாடின் முடிவைத்துப் பார்வந்து தந்ததே.

Even as mine Master granted me the grace of his feet,
He had made me the head of all;
And investing me with the regalia-might of Gnana-sword;
He placed on my head the Crown of Grace Abounding
And proclaimed;
"May thou for ever hold sway over this Land of Deliverance"
— All these he did, descending on earth here below.

திருவடியை என்தலைமீது வைத்தபோதே, என்தலைவன் என்னை யாவர்க்கும் தலைவனாக்கினான்; பின்னை வலிபொருந்திய ஞானவாளை எனக்கு அளித்தருளினான்; "எல்லையில்லாக் காலம் இவ்வீட்டு அரசை ஆளக்கடவாயாக" என்று கூறி, அருளாம் முடியினை எனக்குச்சூட்டினான். — அனைத்தும் இம்மண்ணுலகுக்கு இழிந்து தந்தான்.

(தொடரும்)

"ஞானசம்பந்தம்"

அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருகிறது. சமயப்பொருள் முதலியவை குறித்த தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையானது. சந்தாத்தொகையைக் கீழ்க்கண்ட முகவரிக்கே அனுப்பிவைக்கவும்.

ஆண்டுக் கையொப்பம்,

உள்நாடு ரூ. 3 - 00 * வெளிநாடு ரூ. 4 - 00

செயலாளர், "ஞானசம்பந்தம்" அச்சகம்,
தருமபுரம், மாயூரம் P. O.

மதிப்புரை

1. "இராமலிங்கரும், தமிழும்"
2. "வடலூர் வரலாறு"

ஆசிரியர் சன்மார்க்க தேசிகன் என்னும் ஊரன் அடிகள்.

இராமலிங்க அடிகள் தமிழ் மொழிக்கும், இலக்கியத்திற்கும் செய்துள்ள தொண்டும் சீரிய அருட் பணியும், வரலாறும், தெளிவாகவும், விரிவாகவும் இந்நூல்களில் காணலாம்.

அடிகள் சிறுவராயிருந்தபொழுது, உலகியல் படிப்பில் நாட்டமில்லை. கற்கவேண்டுவனவற்றை இறைவனிடமே கற்றார். அடிகளின் கல்வியும் கேள்வியும் இறைவனிடத்துப் பெற்றதேயொழிய வேறு எவ்வாசிரியரிடத்தும் பெற்றதல்ல. இங்ஙனம் ஓதாதே உற்ற கலைகளை எல்லாம் உணர்ந்தார். சிறு வயதிலே அடிகள் அருள் பாடல்களை தமிழில் பாடத் தொடங்கினார் – பின்னர், அடிகள் தமிழில், அருட் கவிஞராய், ஞானசிரியராய், போதகாசாரியராய், நூலாசிரியராய், உரையாசியராய், பதிப்பாசிரியராய், வியாக்கியான கருத்தராய் சிறந்து விளங்கிய விபரமும் இந்நூலாசிரியரால் கோர்வையாகவும் பூரணமாகவும் இனிய எளிய தமிழில் எடுத்தாளப் பெற்றிருக்கிறது. அடிகள் தம்மை, தமிழகத்தில் பிறப்பித்தமைக்காக, அடிகள், இறைவனுக்கு நன்றி கூறுதலும் "தமிழ்" என்னும் சொல்லுக்கிட்ட உரையும், மிகவும் ஊர்ந்து கவனிக்க ஒத்ததாயதோடு அடிகளின் மொழிப்பற்றும் பக்தியுடன் கூடிய தேசாபிமானமும் சிறந்து விளங்குவனவாகும். அடிகளின் கொள்கைகளுள் மிகவும் தலையாயது ஜீவகாருண்யம். ஒன்று புலால்மறுத்தல் மற்றது அற்றார் அழிபசி தீர்த்தல். அதற்காக 1867ல் தருமச்சாலை ஒன்று ஏற்படுத்தியும் அறிவைப் பெருக்க சமரச சன்மார்க்க சத்திய ஞான சபை அமைத்தும் போற்றற்குரிய பேரறப் பணிகள் அடிகளார் புரிந்ததை விபரமாக சுவைபட வடலூர் வரலாறு என்ற பிரதியில் நூலாசிரியர் சுருங்கச் சொல்லி விளங்க வைத்திருப்பது வாசகர்களின் கருணையையும் ஆர்வத்தையும் மிகவும் தூண்டுவதாகும்.

புத்தகங்கள் கிடைக்குமிடம் :

சமரச சன்மார்க்க ஆராய்ச்சி நிலையம்,

சமயபுரம் அஞ்சல் — திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

இராமலிங்கரும் தமிழும்-புத்தகத்தின் விலை ரூ. 1 . 25
உயர்ந்த பதிப்பு ரூ. 1 . 50
வடலூர் வாலாறு புத்தகத்தின் விலை ரூ. 3 . 00
உயர்ந்த பதிப்பு ரூ. 3 . 50

தபால் சிலவு வேறு.

இந்நூல்களை இயற்றிய, திரு. ஊரன் அடிகள், திருச்சிராப்பள்ளி மாவட்ட சமரச சுத்த சன்மார்க்க ஆராய்ச்சி நிலையம் நிறுவனரும், திருச்சிராப்பள்ளி மாவட்ட சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம் தலைவரும், திருச்சிராப்பள்ளி இளைஞர் இலக்கிய மன்றம் தலைவரும், இராமலிங்கர் பணிமன்ற முத்திங்களிதழ் ஆசிரியருமாவர். இவர்கள் தியாகமும், தொண்டும் மிகவும் பாராட்டற்குரியது.

திருக்குடந்தையில் மகாமகம்*

(பிலவங்க ஸ்ரீ மாசி மீ 2 உ 14-2-68)

திரு. K. M. வேங்கடராமையா அவர்கள், M. A., B. O. L.,

திருக்குடந்தைத்தலம்

குடந்தை என மருவி வழங்கப்பெறும் தலமாகிய **கும்பகோணம்** தேவாரங்களில் **குடமூக்கு** எனக் குறிக்கப்பெற்றுள்ளது. இஃது ஒரு பேரூழி நீர்ப்பெருக்கின்போது எல்லா உயிர்களையும் ஒருசேரக்கொண்டு வைக்கப்பட்டிருந்த அமுத குடத்தை இறைவன் வேட வடிவு கொண்டுவந்து அம்பினால் அடித்தபோது உடைந்த மூக்கின் வழியாக அமிர்தம் நாற்புறமும் பரவி நின்ற காரணத்தால் இப்பெயர் பெற்றது என்பர். (கோணம் - மூக்கு). இத்தலத்தைச் சேக்கிழார் சுவாமிகளும் "**நாற்றிசையோர் பரவுதிருக் குடமூக்கு**" எனப் புகழ்ந்துள்ளார். இதற்குப் **பாஸ்கரக்ஷேத்திரம்** என்ற பெயரும் உண்டு.

இத்தலம் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றினாலும் சிறப்புற்றுத் திகழ்வது; திருமால் பூசித்துச் சாரங்கமும் சக்கரமும் பெற்ற இடமாயது; பிரமனும், இந்திரனும், சூரியனும், காசிப முனிவரும், ஏமரிஷி, சுதன்மன் ஞானவான் என்ற அந்தணர்களும், கிருதவீரியன் வீரவர்மன் முதலிய அரசர்களும் பூசித்து நற்பேறு பெறுதற்கு இடமாகவும் விளங்கியது; அறுபத்துமூன்று நாயன்மார்களுள் ஒருவராகிய **மூர்க்க நாயனார்** மாகேசுவரபூசை செய்து வீடு எய்திய தலமும் இதுவேயாகும்.

இத்தலம் **பஞ்சகுரோசத்தலங்கள்** எனப்படும் திருவிடைமருதூர், திருநாகேச்சுரம், தாரேச்சுரம், சுவாமிமலை, பாடலவனம் (கருப்பூர்) என்ற சிவத்தலங்களால் சூழப்பட்ட பெருமையுடையதுமாகும்.

---

* *1956ல் அச்சிட்ட திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து வெளியீடாகிய மகாமக மலரினின்று எடுக்கப்பெற்றது.*

சிவபெருமான் திருக்கோயில்கள்

திருஞான சம்பந்த சுவாமிகளாலும், திருநாவுக்கரசு சுவாமிகளாலும் பாடப்பெற்ற திருக்கோயில்கள் மூன்று குடந்தையில் உள்ளன. அவை (1) குடமூக்கு (ஆதிகும்பே சுவரர் கோயில்), (2) குடந்தைக்கீழ்க்கோட்டம் (நாகேசுவ ரர்கோயில்), (3) குடந்தைக்காரோணம் (காசிவிசுவநாதர் கோயில்) என்பனவாம். இங்குப் படைப்புக் காலத்திலேயே இறைவன் முதலில் தம் திருக்கையாலேயே அமிர்தகுடத்தில் தாம் உண்டான காரணத்தால் **ஸ்ரீஆதிகும்பேசுவரர்** எனவும், அமிர்தம் நிறைந்த இடத்தில் உண்டான காரணத்தால் **அமுத லிங்கேசர்** எனவும் பெயர் பெற்றனர். இங்கு, உமாதேவி யார் **மங்களாம்பிகை** என்ற திருநாமம் பூண்டு, மந்திரபீடத்தில் எழுந்தருளி, அடியார்களுக்கு அருள் புரிகின்ருள். அதனுல் மங்களாம்பிகை மந்திரபீடேசுவரி எனவும் பெயர் பெறு கிருள்.

இத்தலத்தில் நாகேசுவரர், காரோணர் (காசிவிசுவநாதர் சோமேசர்) திருக்கோயில்களேயன்றி, அபிமுகேசர், கவுதமே சர், பாணபுரீசர், ஆராவமுதர், ஆதிவராகர், சாரங்கபாணி, சக்கரபாணி, வரதர் முதலான சிவவிஷ்ணு ஆலயங்கள் சிறப் புடன் திகழ்கின்றன.

> **''இடைமருதன் முதலாவோர் ஐவர்நா**
> **கேசர் நடம் இயற்ற வல்லார்**
> **கடையணுகாச் சோமேசர் காரோணர்**
> **அபிமுகர்நற் கவுத மேசர்**
> **தடையிலருட் பாணபுரி யார்சுதரி**
> **சனர்சார்ங்க தரர்வ ராகர்**
> **அடைவரதர் இவர்சூழ அமர்கும்ப**
> **லிங்கேசர் அடிகள் போற்றி''**

என்பது திருக்குடந்தைப் புராணப் பாடலாகும்.

தீர்த்தங்கள்

இத்தலத்துள் பதினன்கிற்கு மேற்பட்ட தீர்த்தங்கள் அமைந்துள்ளன. அவற்றுள் தம்முள் மூழ்கிளுேருடைய பாவங்கள் அனைத்தையும் போக்கவல்ல கங்கை, யமுனை, சர சுவதி, கோதாவரி, நருமதை, சிந்து, காவேரி, வேகவதி முத

லான ஒன்பது தீர்த்த மாதாக்களும் தங்கள் பாவங்களைப் போக்கிக் கொள்ளும் பொருட்டு வந்து நீராடும் சிறப்பினை யுடைய **மகாமக தீர்த்த**மேமிகச்சிறப்புடையதாகும். திருநாவுக் கரசு சுவாமிகளும்,

> **"தாவிமுதற் காவிரிநல் யமுனை கங்கை**
> **சரசுவதிபொற் றாமரைபுட் கரணி தெண்ணீர்க்**
> **கோவியொடு குமரிவரு தீர்த்தஞ் சூழ்ந்த**
> **குடந்தைக்கீழ்க் கோட்டத்தெம் கூத்தனாரே"**

என்று இத்தீர்த்தச்சிறப்பைக் கூறியுள்ளார். முற்கூறிய அமுதகும்பத்திலிருந்து வழிந்தோடிய அமுதத்தின் ஒருபகுதி இதனுள் தங்கித் தீர்த்தமாயிற்று என்பது புராணவரலாறு கும். இதன்பெருமையினைச் சேக்கிழார் சுவாமிகள்,

> **"பூமருவும் கங்கைமுதற் புனிதமாம் பெருந்தீர்த்தம்**
> **மாமகந்தான் ஆடுதற்கு வந்துவழி படுங்கோயில்"**

என்று சிறப்பித்தருளியுள்ளார்.

மகாமக தீர்த்தத்தின் வேறுபெயர்கள்

இத்தீர்த்தத்துள் அமுதம் தங்கிய காரணத்தால் **அமுத தீர்த்தம்** என்றும், மகாமகத்திற்கு ஓராண்டிற்கு முன்னரே எல்லாத்தீர்த்தங்களும் ஒருங்குவந்து சேருங்காரணத்தால் **பகு தீர்த்தம்** என்றும், தீர்த்த மாதாக்கள் கன்னியர்களாக வந்து நீராடிப் பெரும்பேறடையுங் காரணத்தால் **கன்னியா தீர்த்தம்** என்றும், குரு சிம்மராசியில் வரும் மாசிமகத்தில் யாவரும் நீராடிப் பேறுபெறும் காரணத்தால் **மகாமகதீர்த்தம்** என்று பெயர் கூறப்படும்.

மகாமக புண்ணியகாலம்

தேவகுருவாகிய பிரகஸ்பதி சிம்மராசியை யடைந்து அந் தச் சிம்மராசிக்குரிய சூரியன் தன்மகன் சனியின் வீடுகளுள் கும்ப ராசியாகிய ஏழாமிடம் சார்ந்துநிற்க, மகநட்சத்திரத்தில் பௌர்ணமியன்று சந்திரன்வந்து சிம்மராசியில் நிற்கிற குரு வுடன்சேர, இவ்விருவரையும் சூரியனும், சூரியனை இவ்விரு வரும் முழுப்பார்வையுடன் பார்க்கும்நாளில் வருவது **மகா மக புண்ணியகாலம்** ஆகும். இப்புண்ணியகாலம் பன்னிரண்டு

ஆண்டுகட்கு ஒருமுறைவரும். இவ்யாண்டு 14—2—68ல் வருகிறது.

மகா மகக்குளத்திலுள்ள தீர்த்தங்கள்

மகாமகக்குளத்தினுள் நாற்புறங்களிலும் இந்திரன், அக்கினி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன், கோதாவரி, காவிரி, கன்னியாகுமரி, தாமிரபருணி, சாயு, கங்கை, பிரமன், யமுனை, சிந்து, நர்மதை முதலான தீர்த்தங்களும், குளத்தின் நடுவில் கன்னிதீர்த்தம் முதலான அறுபத்தாறு தீர்த்தங்களும் அமைந்து இருக்கின்றன என்று தலபுராணம் கூறும்.

மகாமகத் தீர்த்தச்சிறப்பு

மாசிமகநாளன்று இம்மகாமகத் தீர்த்தத்துள் விதிப்படி மூழ்கினவர் கங்கைமுதலிய தீர்த்தங்களில் மூழ்கின பலனை ஒருங்கே அடைந்து பேறுபெறுவர். இத்தீர்த்தத்தை ஒருதரம் வலம் செய்வோர் பூமியை நூறுதரம் வலம் செய்த பேற்றையடைவர். ஒருதரம் மூழ்கினவர் உண்மையிற் சிவனேயாவர்.

> **"அச்சிவதீர்த்தம் வானா வொருதர மடைந்து மூழ்கின்**
> **மெய்ச்சிவன் ஆவன்"**

என்பது திருக்குடந்தைப் புராணம். எனவே இத்தீர்த்தத்தில் மகாமகபுண்ணிய காலத்தில் நீராடிமன்பதைகள் பெரும்பேறடைவாராகுக.

கொடியேற்றம்

திரு. ரா. சண்முக சுந்தரம் செட்டியார் அவர்கள்,
அப்பர் இல்லம், திருவதிகை.

உலகெங்கணும் கொடியேற்று விழா கொண்டாடப் பெறுகிறது. அக்கொடிகள் பலதிறப்படுவன. அரசுகொடி, அரசியல் கட்சிக் கொடி, சமயக்கொடி என்பனவாய்ப் பல வுள. இனத்தவர்களுக்கும் கொடி உண்டு. சமயத்தவர் களுக்கும், இனத்தவர்களுக்கும் தனித்தனிக் கொடிகள் உள்ளன. கல்விக் கொடி, கொடைக் கொடி, தவக் கொடி, அங்காடிக் கொடி என்பனவும் இருந்தன. "நல் பல பல்வேறு குழூஉக் கொடி" **(372-373)** என்று மதுரைக் காஞ்சியில் குறிக்கப்பட்டுள்ளது. கொடைக் கொடியைத் தியாகக் கொடி எனவும் கூறுவர். "தியாகக் கொடியே தனி வளரச் செய்து" என்பது திருவாரூருலா. "தொல்லாணை நல்லாசிரியர், உறழ் குறித்தெடுத்த உறுகெழு கொடியும்" **(170-171)** என்று பட்டினப்பாலை கல்விக் கொடியைக் குறிக்கிறது.

இனி, இக்கொடிகள் ஒரு குறிக்கோள் கொண்டு ஏற்றப் படுவன. அஃது எடுப்போரது உறுதியை அறிவிக்கும். ஏற் றப்படும் கொடிகள் ஓர் உணர்ச்சியை ஊட்டுகின்றன. அவ் வுணர்ச்சியால் மக்கட்கு ஊக்கம் உண்டாவது ஒரு தலை. அவர்கட்குக் கருத்தில் ஒற்றுமையும் விளையும். அதனால் ஒன்றுபட்ட முயற்சியும் கைகூடுகிறது. எனவே உறுதிக் கும், ஒற்றுமைக்கும், ஒன்றுபட்ட முயற்சிக்கும் அறிகுறி யாவது கொடி என்பது தெளிவு. மக்கட்கு இம்மூன்றும் எளிமையில் கூடுவன அல்ல. கொடியைக் காணுந்தோறும் உணர்ச்சி எழுகின்ற காரணத்தால் அக்கொடியை யுயர்த்து தலும், வணக்கம் செய்தலும், வாழ்த்துதலும் ஆகிய பெரு வழக்கு இன்றியமையாததாயிற்று. இவ்வழக்கு இற்றைய நாளில் போர்க்களங்களில் நிகழ்கிறது. பண்டைக் காலத்

திலும் நிகழ்ந்தது. கொடியை வெற்றிக் குறியாகக் கொண்டனர். முருகப்பெருமானது சேவற்கொடியை வாழ்த்திய முறைமையை "கோழி ஓங்கிய வென்றடு விறற் கொடி, வாழிய பெரிதென்றேத்தி (38-39) என்று திருமுருகாற்றுப் படை விளக்குகின்றது. கொடியைப்பாடுதலும் வழக்கென்று "கொடி பாடித் தேர்பாடி" என முத்தொள்ளாயிரம் குறிக்கின்றது.

இத்துணை உயர்வாகக் கருதப்படும் கொடியை எடுத்து உயர்த்தி பறக்க விடுவதே வழக்கம். நுடங்கி, ஒடுங்கி இருந்த சீலை ஒரு கோலினிடைக் கட்டி உயர்த்தியதும், அது தன் கட்டு நீங்கி சுதந்திரம் பெற்று ஆகாயத்தே ஒளியிடைப் பறக்கக் காண்கிறோம். அவ்வாறு விளங்கும் அதன் நிலை நம் உயிரின் நிலையை குறியீடாகக் காட்டுகிறது. உயிர்கள் உடலின்றி தனித்து ஆணவத்தோடு ஒடுங்கி நின்று யாதொரு அறிவும், செயலும் இன்றி இருக்க, இறைவன் உயிர்கள் மாட்டு வைத்த அருளால், கலையினால் ஆணவத்தைச் சிறிது நீக்கலும், அறிவும், இச்சையும் விளங்கி உடலைப்பெறும் பக்குவ நிலையை உயிர்கள் பெறுகின்றன என்பது சாத்திரம். இந்த நிலையைக் கேவல நிலை என்பர். பின் உடல், கருவி, போகப் பொருள், அவை விளங்கும் உலகம் முதலியன உயிர்கள் பெற்று வினைகளை நுகர்ந்து கழிதலும், கட்டு நீங்கிப் பரஞான வெளியே ஞான ஒளியில் உயர்ந்து சுதந்தரம் பெற்று விளங்கும் குறிப்பை கொடிக் கம்பத்தில் பறக்கும் கொடி விளக்குவதாகும்.

இவ்வரிய குறிப்பினை விளக்கும் கொடி வெறும் சீலை மாத்திரமாக அமைவது அன்றி அதன்கண் சில உருவங்களும் தீட்டப்படும். சிவபெருமானுக்கு ஏற்றுக்கொடி, திருமாலுக்குக் கருடக்கொடி, பிரமனுக்கு அன்னக்கொடி, தமிழ் நாட்டு மூவேந்தர்களுக்குப் புலி, மீன், விற்கொடிகள். இற்றைய நாள் அரசுக்கொடிகள் கோடுகளாலும், நிறத்தாலும் வேறுபடுவன. கொடிகளில் பொறிக்கப்படும் உருவங்கள் அக்கொடிகளை உடையோரது கொள்கைகளை விளக்குவன. சைவர்கள் சிவபெருமானது ஏற்றுக்கொடியை உயர்த்திப்

பறக்க விடுகிருர்கள். இறைவனுக்கு ஏற்றுக் கொடியை அமைத்தது பண்டைய வழக்கு. புறநானூற்றில் கடவுள் வாழ்த்தில் "ஊர்திவால் வெள்ளேறே, சீர்கெழு கொடியும் அவ் ஏறு என்ப" என்று பாரதம் பாடிய பெருந்தேவனுர் குறித்துள்ளனர். சிவ பெருமானுக்கு எருது சிறந்த ஊர்தி யாவதோடு அவருடைய கொடியும் ஆகும் என்பது. "ஏற்றுக் கொடியுடையாய்" (1) என மணி வாசகனுர் திருப்பள்ளி யெழுச்சியினில் போற்றுகின்றனர், இறைவனுக்குப் பல விடைகள் உண்டு என்பர் ஆன்ருேர். அவைகளுள் தரும விடை ஒன்ருகும். இறைவன் அறவடிவினன் ஆதலினுல் அவன் செயல் யாவும் அறத்தின்பால் படுவன எனக் கொண்டே அவனுக்கு ஏற்றுக் கொடியை உரியதாக்கினர். கொடி அதிகாரத்தையும் குறிக்கும். சிவ பெருமானே இலய, போக, அதிகார சிவங்களாக எண்ணுவர் சிவ ஞானிகள். இவ் வதிகார சிவமே உயிர்களின் வினைகளை நாடி அவற்றின் பயனை உயிர்களுக்குக் கூட்டுவது. எனவே வினையின் பயனை நுகர் வித்து உண்மை ஞானம் தலைக்கூடும்படிச் செய்து உயிர் களின் குற்றங்களை மாற்றுவது இறைவன் கடமை என்பது புலனுகும். இக்குறிப்பையே காட்டுவது ஏற்றுக்கொடி. அக்கொடியை காணுந்தொறும் பகைமை உடைய ஐம்பெ ருைம் புலன்கள் மிகுதியும் திடுக்கிடும் வண்ணம் அது பரஞான வெளியில் அழகுடன் பறப்பதாகும். இக் கருத்தைத் திருத் தசாங்கத்துள் மணிவாசகனுர்,

சோலைப் பசுங்கிளியே! தூநீர் பெருந் துறைக்கோன்
கோலம் பொலியும் கொடி கூருய் — சாலவும்
ஏதிலார் துண்என்ன மேல்விளங்கி ஏர் காட்டுங்
கோதிலா ஏருங் கொடி.

என அறிவித்தது அறியத்தக்கது. கந்தர் கலிவெண்பாவினும் குமரகுருபரர், இறைவன் உயிர்களுக்கு ஐந்தொழிலை இடை யருது செய்யுங் கடமையில் உறுதி உடையான் என்பதை உணர்த்த "காரணத்துள் ஐந்தொழிலு மோவா தளித்துயர்த்த வான் கொடியும்" என்றருளினுர். இங்ஙனமாக, இறைவன் உயிர்களிடத்தில் கருணைபாலிக்கும் முறைமை அவன் உயர்த் திய ஏற்றுக்கொடி குறிப்பதெனின், அக்கொடியைப் போற்று

வோராகிய நாம் உறுதிகொள்ள வேண்டும் என்ற கருத்துடனே அடிக்கடி பலவாய இடங்களில் ஏற்றுக் கொடியை உயர்த்தி வைக்கின்றோம்.

இனி, எத்தகைய உறுதியைச் சைவசித்தாந்த சாத்திரம் குறிக்கின்றது என்று கருதுவாம். மெய்கண்ட சாத்திரங்களுள் கொடிக்கவி ஒன்றாகும். அதனை அருளியவர் உமாபதி சிவனார். முதற் செய்யுளுள், உயிரினிடத்து இறைவனும் ஆணவமும் அத்துவிதமாய் கலந்து நிற்பன; இறைவன் ஒளி என்று போற்றப்படுபவன்; ஆணவம் இருள்எனப்படும்; ஒளியும், இருளும் பகை பொருள்கள்; ஒளி விளங்கும்பொழுது இருள் காணப்பெறுவதில்லை; இருள் இருந்துழி ஒளி விளங்குவது இல்லை; இங்ஙனமே உயிர்களுக்குப் பெத்தம், முத்தி என்ற நிலைகள் உண்டு; பெத்த நிலை பாச அல்லது கட்டு நிலை. இந்நிலையில் இருளாகிய ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களில் உயிர் மூழ்கி ஞான ஒளியாகிய இறைவனை உணராது விளங்குவதாகும்; முத்தி நிலையில் மும்மலங்களினின்று நீங்கி இறைவனோடு ஒன்றி நின்று, உயிர் அருளைப் பெறுவதாம்; என்ற கருத்துக்களை அடக்கி,

ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றே இடம்:
ஒன்று மேலிடில் ஒன்று
ஒளிக்கும் எனினும் இருள் அடராது;
உள் உயிருக்கு உயிராய்த்
தெளிக்கும் அறிவு திகழ்ந்துள தேனுந் திரிமலத்தே
குளிக்கும் உயிர் அருள் கூடும்படிக் கொடிக் கட்டினனே.

எனவரும் திருப்பாட்டை அருளினார்கள். தில்லைக் கூத்தனுக்கு ஆதிரை விழாவுக்கு கொடி ஏற்றிய பொழுது இக் கொடிக்கவியை அருளினார்கள் என்பது வரலாறு. திருவருளைக் கூடுவதற்கு உறுதி பெறக் கொடி கட்டுவதாக அவர் கூற்று விளங்குகிறது. இறைவன் மறையினால், மனத்தினால் வாக்கால், அளவைகளால் எட்டுதற்கு அரியவன். அறிதற்கு முடியாத இறைவனை உணர சிவஞானிகள் முயல்கின்றனர். காணப்படும் பொருள்களையும், உணர்வினால் அறியப்படும்

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

ஞானப்பழம்

புலவர், திரு. வே. அரசு அவர்கள்,
தமிழாசிரியர், எளச்சிபாளையம்.

(மலர் 18, இதழ் 12, பக்கம் 588ன் தொடர்ச்சி)

**சிட்டித் தொழில்செய்யும் செம்மலரோன் நான்முகனைக்
குட்டிச் சிறையிட்டுக் காசினியைக் காத்துப்பின்
வேதத்தி னுட்பொருளாம் மெய்ப்பொருளைத் தந்தைக்குப்
போதித்த ஞானப் பழம்.**

உலகையெல்லாம் படைக்கும் பிரம்மதேவனுக்கு வேதங்களும், சாத்திரங்களும், கலைஞானங்களும் நன்ருகத் தெரிந்திருக்கவேண்டும். ஆனுல், வேதத்தின் முதற்பொருளான முதற்சொல்லான - ஓம் என்னும் சொல்லுக்கே பொருள் தெரியவில்லை. ஆனுல், எப்பொழுதோ கேட்டுக் கற்றுணர்ந்திருந்த அந்தச் சொற்பொருளைத் தந்தை சிவபெருமானுக்கே கூறினுர் - குழந்தை முருகன். அதனுல் குருநாதன் என்ற பெயரையும் அடைந்தார்.

**— படைப்போ
னகந்தை உரைப்ப மறையாதி எழுத்தென்
றுகந்த பிரணவத்தி னுண்மை — புகன்றிலையால்
சிட்டித் தொழிலதனைச் செய்வதெங்ங னென்றுமுனம்
குட்டிச் சிறையிருத்தும் கோமானே! — மட்டவிழும்
பொன்னங் கடுக்கைப் புரிசடையோன் போற்றிசைப்ப
முன்னம் பிரமம் மொழிந்தோனே**

என்கின்ருர் குமரகுருபரஅடிகள்.

(முன்பக்கத் தொடர்ச்சி)

பொருள்களையும் கண்டு கழிப்பிக்கிருர்கள். இவ்வாறு கழிக்கவும் உணர்வில் சிவ ஞானம் கூடுகிறது. அவ்வறிவிற் பிரியாது விளங்கும் இறைவன் நம்மைப் பிரியாது நிற்குந் திறம் உணர்வது ஒரு தலை. அவ்வாறு உணர்தற்குக் கூடும் அருளைச் சார விழையுங் குறிப்பே கொடியேற்றும் செயலாகும். நமது வேட்கையைக் குறிப்பது கொடி. அவ்வேட்கையே இறவா இன்பத்தைப் பயப்பது.

அக்காலம் முருகனுக்கு வயது இரண்டு. தாய் உமா தேவியின் மடியிலே தவழ்ந்து கொண்டிருக்கின்றான் குழந்தை. சிவபெருமானை நோக்கிய அன்னை இனிமையான மொழிகளால் கேட்டுக்கொண்டாள்: "தேவா! ஓம் என்ற பிரணவமந்திரத்தின் உட்பொருளாகிய பஞ்சாட்சரத்தை எனக்கு உபதேசித்தருளவேண்டும். வேத சிரத்தின் உண் மைப்பொருளை உணர்ந்து சிவஞானத்தை அடைவதற்கு அது வல்லவா வழியாகும். அருள் செய்வீராக" — என்று கேட் டனள்.

சிவபெருமானும் அங்கிருந்த தேவர்களையெல்லாம் அப் பால் போகச்செய்துவிட்டு அன்னை விரும்பியவாறே ஓமெனும் சொற்பொருளைக் கூறத் தொடங்கினர். இப்படி இரகசிய மாகத் தேவிக்கு உபதேசித்த மந்திரத்தை மடியிலிருந்த கந் தனும் ஊன்றிக் கேட்டுக்கொண்டான். மழலைமொழிக் குழந்தை அம்மந்திரப்பொருளை நன்ருக மனத்தில் பதியவைத் துக்கொண்டது. இளமையில்கல், இளமைக்கல்வி சிலைமேல் எழுத்து என்றெல்லாம் சொல்வார்கள். இந்தக் கேள்வி ஞானம் ஒன்று பத்து நூறு ஆயிரமாக வளர்ந்துகொண்டே போயிற்று முருகனுக்கு. நாட்கள் பல கடந்தன. அப் பொழுது குமாரக் கடவுளுக்கு வயது ஐந்தும் ஆயிற்று. தந்தையே ஆசிரியராக இருந்து வேத வேதாந்தங்களையெல் லாம் குறைவில்லாமல் கற்றுக்கொடுத்தார். எல்லாவற்றையும் நன்கு கற்றுத் தேர்ந்து பெரும் புலவனுகிவிட்டான் கந்தன். ஒருநாள் சிவபெருமானும் உமாதேவியாரும் மிக்க வலிமை வாய்ந்த ஒரு வேல் படையைத் தந்தனர். அது, உமை தன் சக்தி முழுமையும் சேர்த்து அளித்த தன்மையுடையதாயிருந் தது. அதை முருகனிடம் தந்து அசுரர்களைவென்று தேவர் களைக் காத்திடுக என்று அருளிச்செய்தனர்.

முருகப்பெருமானும் தன்னுடைய நவவீரர்களும், ஒன் பது இலட்சம் பூதப்படைகளும் வணங்கி வாழ்த்தத் தேவ சேனுபதியாக வீற்றிருந்து காட்சி நல்கினர். அச்சமயம், தேவர்களும், திருமால், பிரம்மன் முதலியவர்களும் சிவபெரு மானைத் தரிசனம் செய்துவிட்டுச் செல்லக்கைலைமலைக்கு வந்து

சேர்ந்தனர். எல்லாத் தெய்வங்களின் வன்மைகளும் ஒரு சேரத் திரண்டு,

மறைகளின் முடிவால் வாக்கால் மனத்தினு லளக்கொணுமல்
நிறைவுடன் யாண்டுமாகி நின்றிடும் நிமல மூர்த்தி—

ஆகிய முருகப்பெருமான் தங்கியிருந்த கந்தமாதனமலை வழியாகவே அத்தேவர்கள் அனைவரும் சென்ருர்கள்.

பண்டாழி சங்கு கொண்டாழி தங்கு
பண்போ னுகந்த மருகோனுகிய முருகனைத்

தேவர்கள், பூதர்கள் எல்லோரும் கைகுவித்துத் தலைதாழ்த்தி வணங்கிச் சென்றனர். திருமாலும் தம் மருகனின் பெருமையை உணர்ந்தவராதலால் தம் வணக்கத்தைக் கூறிவிட்டுச் சென்ருர். ஆனுல், பின்னர்வந்த பிரம்மதேவனே, தானெனும் அகந்தை மிக்கு - மாலயன் தனக்கும் ஏனை வானவர் தமக்கும் யார்க்கும் மூலகாரணமாய் நின்ற மூர்த்தியைப் பாலனென்றெண்ணி எள்ளி வணக்கம் செய்யாமலேயே சென்றனன்.

பொன்னுரு வமைந்த கஞ்சப் புங்கவனுகி நல்கும்
என்னுரு வாகிக் காக்கு மீசன்போலிறுதி செய்யும்
மின்னுரு வென்ன யார்க்கும் வெளிப்படை போலுமன்னுன்
தன்னுரு மறைக ளாலும் சாற்றுதற் கரியதன்றே

என்று அரி அர பிரம்மனும் தானுமாகி எல்லாத் தொழிலையும் ஆற்றவல்ல வேதங்களாலும் எடுத்துக் கூறமுடியாத புகழுடைய அநாதியான பரம்பொருள் முருகன் என்று போற்றிக் கூறும் குமரப்பெருமானைச் சிறுவன் - என்றெண்ணி வணங்காமல் சிவபெருமான் வீற்றிருக்கும் கயிலைமலைநாடிச் சென்ருன்.

பிரம்மனின் செருக்கை உணர்ந்த முருகன், அவரை அருகே அழைத்துவரச் செய்தார். வந்து நின்ற பிரம்மனை நோக்கிக் கேட்டார்.

நீர் செய்துவரும் தொழில்யாது ?

நான் இறைவனின் ஆணையின்படி படைப்புத் தொழிலைச் செய்து வருகிறேன்.

(தொடரும்)

"நெஞ்சில் நீங்காதான்!"

திரு. அரங்க: முத்துமணி அவர்கள்,

செந்துறை.

"இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க!"

இது மணிவாசகப் பெருந்தகையின் சிவபுராணத்தில் ஒரு அணிவாசகம்! பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் இறைவன் அடியார்களது உள்ளக்கோயிலிலே வந்து தங்குகின்றான்; நாம் மனக்கதவைத் திறப்பதற்கு முன்னரே, இறைவன் கருணைகொண்டு, தானே முன்வந்து அருள்பாலிக்கின்றான். இதனை மணிவாசகப் பெருந்தகை, இன்னோரிடத்தில், "தேனாய் - இன்னமுதமுமாய் தித்திக்கும் சிவபெருமான், தானே வந்து எனது உள்ளம் புகுந்தான்" எனக்கூறுமாற்றால் தெள்ளிதின் தெளியலாம்; பின், "நெஞ்சில் நின்றனன்" எனக்கூறாது, "நெஞ்சில் நீங்காதான்" — எனக் கூறியதின் காரணம் என்னை?

சிந்தையிலே முந்திக்கொண்டுவந்து தங்குவதும் உண்மையெனில் எவ்வாறு? ஆசிரியர் வள்ளுவரைச் சந்திப்போம்;

> "மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
> நிலமிசை நீடுவாழ்வார்".

கடவுள் வாழ்த்தில் இது ஒரு குறள். பன்னருஞ் சிறப்புறு பரிமேலழகர், நன்னயமாக உரை எழுதுவார்; "அன்பான் நினைந்தவரது, உள்ளக்கமலத்தின்கண் அவர் நினைந்த வடிவொடு விரைந்து சேரலின் "ஏகினான்" என இறந்த காலத்தாற் கூறினார் - என - விரைந்து சேரல் எவ்வாறு? நினைந்த பின் அன்றோ விரைந்து சேரல் இயலும் - பின் ஏகினான் என இறந்த காலத்தாற் சுட்டியது எவ்வாறு? அனைத்தும் சிந்திக்கப்பாற்று.

இரண்டு பெரியவர்கள் அடுத்த நாள் ஒரு ஊருக்குச் செல்வதாகப் பேசி முடித்தனர். குறிப்பிட்ட நாளில் முன்னதாகப் புறப்பட்ட ஒருவர், இன்னொருவரின் இல்லத்துக்கு வந்து, "தயாரா?" - எனக் கேட்கின்றார்; குளிக்கக்கூட புறப்படாத அவர், "இதோ! வந்துவிட்டேன்" - என்று விரைவாக் கூறுகிறார்; இன்னும் குளிக்கவில்லை; சாப்பிடவில்லை; அணி செய்யும் துணைகளை நனிமிக விருப்பில் நயந்து அணியவில்லை; இத்தனையும் செய்யாததற்கு முன்பே, "வருகிறேன்" என்று எதிர்காலத்தாற் கூறாது, "வந்துவிட்டேன்" - என்ற இறந்த காலத்தாற் கூறுகிறார்.

எனவே, "ஏகுவான்" என்று எதிர்காலத்தாற் சுட்டாது, "ஏகினான்" என்று இறந்த காலத்தாற் கூறியது, இறைவனுடைய பெருங்கருணையின் திறனை வியந்தே என்பது தெள்ளிதின் விளங்குகின்ற தன்றோ!

நமது இருதயம் ஒரு தாமரை மொக்குப் போல அமைந்துள்ளதைப் பலரும் அறிவர். குவிந்திருக்கும் இதயக் கமலத்தில், ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களைப் போட்டு மூடி வைத்திருக்கும் மாந்தர், தான் என்ற அகங்காரங் கொண்டு அலைகின்றனர்: இறைவனைப் பற்றிச் சிந்திப்பதில்லை; சிந்திக்க நேரமுமில்லை; என்றாலும், இறைவன் நம் மீது கொண்ட கருணையால், தானே வந்து நம் உள்ளத்தில் புகுந்து ஆட்கொண்டுவிடுகின்றான்; அருட் சுடரைப் பெய்கின்றான்!

தடாகங்களிலே இருக்கும் தாமரை மொக்குகள் கதிரவனின் ஒளிக் கற்றைகள் பட்டு இதழ்விரித்துச் சிரிக்குமாப் போல, நம்மனத்தில் நல்ல எண்ணங்களை, இறைவன் திருநாமங்களை எண்ணினால், இதயக் கமலமும் விரிய, அங்கு இறைவன் வந்து தானே அமர்ந்துவிடுகின்றான்! அப்பொழுது உடம்பிலே அன்பின் ஒளி பிரகாசிக்கிறது. உள்ளத்திலே அருளின் ஒளி சுடர்விடுகிறது; எனவேதான் மணிவாசகப் பெருந்தகை, "ஊனினை உருக்கி, உள்ளொளிபெருக்கி" என்றும் கூறியருளினார்கள்; "வேண்டி நீயாதுயருள் செய்தாய், யானுமதுவே வேண்டினேன்" — என்றும் ஈண்டிய அன்பாலே கூறுகின்றார்கள்.

"விடையான் விரும்பி என்னுள்ளத் திருந்தான்" என்று நாவுக்கரசு சுவாமிகளும் நவிலும் நல்லுரை ஈண்டு கருதப் பாற்று." If your Honour pleases" – என்று ஆங்கிலத்திலே வழங்குதலும் ஈண்டு உன்னத்தக்கது.

இறைவன் தானே திருவுளங்கனிந்து அன்பர்பால் அருள் பாலிக்கின்றான். பற்றற்றான் பற்றினை நாம் பற்றும் பொழுது, நம்மைப்பற்றிய வினைகளெல்லாம் பறந்தோடுகின்றன. நம் இதய வீட்டை எப்பொழுதும் சுத்தமாக வைத்திருந்தால், தானே வந்து தங்குகின்றான் இறைவன்! அப்படி ஒரு முறை வந்து தங்குகின்ற இறைவன், பின் எப்பொழுதும் தம் நெஞ்சைவிட்டு நீங்குவதில்லை. உடம்பொடு கூடிய உயிரும் நீங்கி விடுகிறது. உள்ளத்தில் நாளும், உதிக்கும் ஓராயிரம் எண்ணங்களும் நீங்கிவிடுகின்றன, இவை அத்தனையும், பற்றிய உள்ளத்திலிருந்து நீங்கிவிடினும், இறைவன் மட்டும் நீங்குவதில்லை என்பதைத்தான் சிறப்பாக மணிவாசகப் பெருமான் ஈண்டு குறிப்பிடுகின்றார்கள் என்பது துணிபு. உடம்பிலிருந்து சீவன் போனாலும், உள்ளத்திலிருந்து சிவமாம் பேரொளி அருளொளி நீங்குவதில்லை; எனவேதான்,

"நெஞ்சில் நீங்காதான்" என்ற அழகுக் கருத்தை இந்த இடத்தில் வைத்தருளினார்கள் என்பது போதரும். ஆகையால் இறைவன் தங்குவதற்குறிய ஆலயமாம் உள்ளக் கோவிலை சுத்தமாக வைத்திருக்க வேண்டும். நாளும் நாளும், நமச்சிவாயப் பதிகத்தை ஓத வேண்டும், அப்படி ஓதினால், திருப்பெருந்துறையில் மணிவாசகப் பெருமானை இறைவன் குருவாகவந்து ஆட்கொண்டதுபோல, நம்மையும் ஆட்கொள்வான்; ஓதுவார் தமை நன்னெறிக்குய்க்கும் வேதமான, நாதனின் தாளினை நாளும் நினைந்து.

நமச்சிவாய வாழ்க ! — என்போம் !

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய்கோபுரவாசல்
தெள்ளித் தெளிந்தவார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காள மணிவிளக்கே!"

— திருமந்திரம்

HYMNS OF THE TAMIL SAIVITE SAINTS

BY

F. KINGSBURY, B. A. (Madras)

AND

G. E. PHILLIPS, B. A. (Lond.), M. A. (Oxon.)

(மலர் 19. இதழ் 1-ன் தொடர்ச்சி)

IV

MANIKKA VASAHAR

(Sanskrit form MANIKYA VACHAKA)

88. தேவர்கோ வறியாத தேவ தேவன்
    செழும்பொழில்கள் பயந்துகாத் தழிக்கு மற்றை
மூவர்கோ னாய்நின்ற முதல்வன் மூர்த்தி
    மூதாதை மாதாளும் பாகத் தெந்தை
யாவர்கோ னென்னையும்வந் தாண்டு கொண்டான்
    யாமார்க்குங் குடியல்லோம் யாது மஞ்சோ
மேவினோ மவனடியா ரடியா ரோடு
    மேன்மேலுங் குடைந்தாடி யாடு வோமே.

88. Our God of gods, whom e'en the devas'king knows
    but in part,
Ruleth the three who in the fair world-gardens
    life impart,
And life maintain, and life destroy; our First,
    Reality,
Father of old, whose consort Uma is, our
    sovereign He
Came down in grace and made e'en me to be His
    very own.
Henceforth before no man I bow; I fear but Him
    alone.
Now of His servants' servants I have joined the
    sacred throng,
And ever more and more I'll bathe in bliss, with
    dance and song.

(To be continued)

Reproduced with the kind permission of Oxford University Press, Calcutta.

(N. B. Copies available for sale at the above Press.)

மதிப்புரை

சிவஞானபோதம் மூலமும் உரையும்

உரை ஆசிரியர் - ஜி. வரதராஜன்

சிவஞானபோதம் என்ற அரிய நூலை, 'வேதம் பசு, அதன்பால்மெய் யாகமம், நால்வர் ஓதும் தமிழ் அதன் உள்ளூறும் நெய்' என்றும், 'சிவ ஞானபோதம் அந்நெய்யின் உறுசுவை' என்றும் சான்றோர் ஆராய்ந்து உருவக அணிதிகழ உரைத்துள்ளனர். மேலும் 'வேதாந்தத் தெளிவாம் சைவசித்தாந்தம்' என உமாபதி சிவனும், 'ஒரும் வேதாந்தமென்றுச் சியிற்பழுத்த, சாரங்கொண்ட சைவசித்தாந்தத் தேனமுது' எனக் குமர குருபர அடிகளாரும் உரைப்பது காணலாம்.

சிவஞானபோதம் பன்னிரண்டு சூத்திரங்களைக் கொண்டது. மொத் தம் 40 அடியே உள்ளது. இத்துணைச்சிறிய நூலில் பெரிய சமய உண் மைகளைக்கூறிய நூலை, வேறு எம்மொழியிலும் பார்க்கமுடியாது. திரு முறைகளில் பரக்கக் காணப்பட்ட தெய்வீக உண்மைகளையும், கருத்துக் களையும் வரிசைப்படுத்திச் சுருக்கமாகவும் தெளிவாகவும் விளக்கும் பெரு மையை உடையது, இந்நூல்.

சித்தாந்த சைவத்தின் முடிமணியாய்த்திகழும் இச்சிவஞானபோத நூலுக்கு, ஆசிரியர் திரு. ஜி. வரதராஜன், 'எழுதிய –சிவஞானபோதம்– உரை' – என்ற இந்தநூல், சமயஉண்மைகளின் தத்துவத்தை ஐயந்திரி பற கற்க ஆவலுடையோர்க்கு ஓர் அரிய விருந்தாகும், உரைதெளிவாக வுள்ளது, மெய்கண்டார் வரலாறும் சேர்க்கப்பெற்றது.

உயர்ந்தரகத் தாளில், பெரிய எழுத்துக்களில் xvii+66 பக்கங்களில் தெளிவாகவும் அழகுறவும் பதிப்பிக்க பெற்றுள்ளது.

தமிழ்ப்பணியும், சமயப்பணியும், கல்வித்துறையில் சீர்த்த இடம் பெறவேண்டும் என்ற ஆர்வம் பெருகிவரும், இந்நாளில், தமிழ் மக்கள் இந்நூலை நன்குவரவேற்று ஆர்வத்துடன் படித்துப்பயன்பெறுவர் என்பது உறுதி. ஆசிரியர், திரு. ஜி. வரதராஜன் அவர்களின் சமயப்பணியும்உண் மைத்தொண்டும், மக்கள் நலனில் அவர்க்குள்ள ஆர்வமும் மிகவும் போற் றதற்குரியனவாம்.

[விலை 0-50 N. P. தபால்செலவு வேறு]

கிடைக்கும் இடங்கள்:—

(1) திருச்சிராப்பள்ளி தமிழ் சங்கம்,
மேலரண்சாலை, திருச்சிராப்பள்ளி—2.

(2) பழனியப்பா சகோதரர்கள்,
தெப்பக்குளம், திருச்சிராப்பள்ளி—2.

சிறப்பிக்கும் சிவகுமாரன்

திரு. ஸ்ரீராமகதாரத்னம். V. தியாகராஜன் அவர்கள்,
புதுக்கோட்டை-1

நெஞ்சைப் பலவிதமாகக் கூறி நிந்தித்தும் வந்தித்தும் பேசுவர் நம் நாட்டு நல்லோர். இறைவனை நினைக்கின்றது என் நெஞ்சு; நினைத்ததை வார்த்தைகளாக வடித்து வாழ்த்து கின்றது என் நாக்கு; எனவே எனது நாக்கும் நெஞ்சும் வாழட்டும்

"*வாழி யெம் மனனு மணி நாவும்மே*".

என்பர் குமரகுருபர சுவாமிகள். வாழ்த்துவதற்கு வாயைக் கொடுத்த இறைவன் வாழ்த்துவதற்கான எண்ணங்களை,எண் ணுவதற்கு அடிப்படையான நெஞ்சையும்தந்தான். "**வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும்**" என்பர் நாவுக்கரசர். நல் வழிச்செலும் மனத்தை நல்லோர் புகழ்ந்தது போலவே, பொல்லா வழியிற் செல்லும் நெஞ்சை இகழ்ந்து பேசினர் பெரியோர்.'' நெஞ்சைக் கல் போன்றது என்பர். ஆனால் ஜடப் பொருளான கல் இயங்காது. நீ இயங்கிக் கொண்டே எங்கெங்கோ போய் விடுகிறாயே! மனமே! உன்னை இரும்பு என்கின்றனர்! இரும்பை மனிதன் தன் விருப்பம் போல் உருக்கியும் தட்டியும் வளைக்கலாமே! உன்னை நான் ஒன் றும் செய்ய முடியவில்லையே! மனத்தைக் குரங்கு என்கின் றனர். குரங்கு தன்னை ஆட்டுபவனுக்கு அடங்குமே! மனப் பேய் என்கின்றனர்! பேய் இறைவன் நாமத்தைக் கூறு வோனிடம் பயந்து பக்கத்திலேயே வராதே! நாய் மனம் என்கின்றனர்! நாய் தன்னைப் பேணி வளர்ப்பவனை நோக்கிக் குலைக்காதே! மனப்புலி என்பர்! புலியை வசப்படுத்திவிட லாமே! மனயானை என்றால் யானையும் தனது பாகனிடம் அடங்குமே! மன விலங்கு என்றால் விலங்கு காட்டில்தானே

வசிக்கும்! நீ நாட்டிலிருக்கும் என்னிடமேயிருக்கிருய்! என்ன செய்வேன்! உன்னை நான் நெஞ்சு என அழைப்பதே குற்றம்! நீ கொம்பில்லாத நெஞ்சு! கொம்பை எடுத்துவிட்டால் (ெ) நஞ்சு! அதுதான் உனக்குத் தக்க பெயர்'' என்ருர் அருட் பிரகாச வள்ளலார்!

இப்படிப்பட்ட நெஞ்சைக் கல் என்றே கூறினர் அருண கிரிநாதர். நெஞ்சு கல்லாக இருந்தால் இறைவன் அங்கு வசிப்பானே என்ற ஐயம் அவருக்கு.! ஆனல் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளோ, ''முருகன் மலைகளிலெல்லாம் வசித்துக் குன்று தோருடும் குமரன் எனப் பெயர் பெற்ற அப்பெருமான் கல்மலைகளிலேயே வாழ்ந்த அனுபவம் காரண மாக என் நெஞ்சு கல்லாகையால், அதையும் மலையென் றெண்ணி, என் மனத்திலும் நீங்காது இடம் கொண்டு நிற் பான்'' என்கின்ருர்.

வளர் செழுங்குருதி சூட்டு வாரணன் வலனுயர்த்த
ஒளி கெழு பருதிவை வேல் ஒரு பெரும் கருணை மூர்த்தி
களி மகிழ் சிறந்துதான் வாழ் கற்களின் ஒரு கல் என்றே
அளிய என் மனத்திலுள்ளன் அகன்றிலன் இருக்கு மன்னே''

''இறைவனே! எனது மனம் கல் போன்றிருக்கின்றது என்ற காரணத்திற்காக என்னிடம் வரமறுத்தாயென்ருல் அது தவறு. கல்மலைகளான கைலாயம், மந்தரம் ஆகிய மலைகளில் இருப்பதில் குற்றமென்று கூறிவிடுவார்கள்''

வலியகல் நின் மனமது மாட்டு மருவுறேன் என்று நீ இசைக்கில்
பொலி பருப்பதம் மந்தர முதலிடத்துப் புணர்ந்தது
தகாததாய் முடியும்
மலிசுவைக் கரும்புங் கந்தியும் மாவும் வருக்கையு வளரிலாங்கலியும்
கலிபுக வரிதென்றகலுறச் சூழுங் கலைசை வாழ் சிதம்பரேச் சுரனே.

என்றும், ''இறைவ! உமாதேவி உன்னைத் தழுவ, அவளது மார்புகள் உன் மீது பட்டு உன் மார்பில் ஒரு தழும்பும், மது ரையில் பிட்டுக்கு மண் சுமக்கச் சென்ற காலத்தில் பொற் பிரம்படித்துப் பாண்டியன் அடித்ததன் காரணமாக உன் முதுகில் ஒரு தழும்பும், பாசுபதாஸ்திரம் பெறுவதற்காக உன்னை நோக்கித் தவம் செய்த அருச்சுனன் வேடுவனுடைய உருவத்திலிருந்த உன்னை யாரென அறியாது கையிலிருந்த வில்

லைக் கொண்டு உன் தலையிலடிக்க அங்கு ஒரு தழும்பும் ஏற்பட்டது. முன்னும் பின்னும் மேலும் தழும்புகள் கொண்ட உனக்கு உட்காரும் இடத்தில் பின்புறத்தால் ஒரு தழும்பு வேண்டாமா? கல்லான என் மனத்தில் அமர்ந்தால் அங்கும் ஒரு தழும்பு ஏற்பட்டுவிடுமன்றோ? எனவே என் மனத்தைச் சேர்வீராக!''

தழுவுமையால் முன்னும் தமிழிறையால் பின்னும்
தொழுமிறையால் மேலும் சுவடு – கெழுமுவகீ
ழின்னுலெனுங் குறைபோம் என் மனஞ் சேர் வாட் போக்கி
யன்றுலமர்ந்தாயடி.

எனத் தனது வாட்போக்கிக் கலம் பகத்திலும் மகா வித்துவான் திருசிரபுரம் ஸ்ரீ பிள்ளையவர்கள் அழைக்கின்றார்கள். இப்படிப்பட்ட நெஞ்சு உருகினால்தான் அங்குவருவான். நெகிழ்ச்சியடைந்து உருகக் கூடியவர் நெஞ்சிலே புகுந்து நிற்பான்.

நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும் பொன்னார் சடை புண்ணியன்

என்றும் காதலாகிக் கசிந்து உருகிக் கண்ணீர் விடும் அன்பரின் இதயத்தையே கோயிலாக இறைவன் கொள்ளுகிறான்

முக மெலாம் கண்ணீர் மல்கி முன் தொழுது ஏத்தும் அன்பர்
அகமலால் கோயில் இல்லை.

என்றும் அப்பரடிகள் கூறுகின்றார். நக்கீரரும் **கள்ளம் கைவிட்டு உள்ள மதுருகி கலந்து கசிந்து தன் கழலிணையவையே நினைந்திட ஆங்கே தோன்று நிமலன்** என்று கூறுகிறார். அவ்வாறு கல்நெஞ்சு உருகி ''நீயே தஞ்சம்'' என அழைத்தால் அருளும் பெருமான் முருகன். அப்பெருமானுக்கு மாலை சூட்டுகிறார் அருணகிரிநாதர்.

''தாயே! நீ மதுரை நாயகனை சொக்க நாயகனைத் திருமணஞ் செய்து கொண்ட காலத்துப் பெருமான் அழகிய உன் திருவடிகளை அம்மிமீது எடுத்து வைத்தானன்றோ? அடியார்களைக் காத்து அவர்களைத் துன்பத்திலிருந்து விடுவிக்கும் உன் திருவடியான மெல்லியமலர் போன்றவற்றை, கவிஞர்கள் உன் திருவடி ஆமையோடு போன்றது என

வருணிக்கின்றனர். ஆமையோடு கடினமானது. உன் திருவடிகள் மென்மையானது எனக்கூட அறியாமல் இவ்வாறு உவமையிட்டார்களோ? அவர்கள்தான் அப்படிச் செய்தார்கள் என்றால் எல்லாம் அறிந்த சிவபெருமான் அந்த மெல்லிய மலர் போன்ற திருவடிகளை அம்மி மிதிப்பதற்காக அந்த வன்மையான கல்லில் உனது திருவடியை ஏற்றினனே! எப்படித்தான் மனம் வந்ததோ?

பஞ்சமுத் தினு வாடு நின் பத பங்க யத் தினை யொப்பெனு
விஞ்சைகற்றவர் வன்புற கமடத்தை வீணில் வியப்பராம்
அஞ்சனப் புயல் தங்கை நின் வரர் அம்மி மீதிலும் வைப்பராம்:
வஞ்சகக் கொடு நெஞ்சரத்தனை வல்லரல்லர் நினைக்கினே.

என்கின்றார் சௌந்தரியலகரியின் ஆசிரியர்.

இந்த வரலாற்றை வைத்துக்கொண்டு "இறைவன் உனது திருவடியைத் தொட்டு அம்மிக் கல்லில் வைத்துத் திருமணச் சடங்கை நிறைவேற்றினன்! அன்னே! அந்த அம்மிக் கல்லில் வைத்த உன் திருவடியை என் கையாலெடுத்து என் மனமான கல்லிலே வைக்கலாமென எண்ணி உன்னைத் துதிக்கிறேன்"

விழி விருந்துதவும் நின் திருமணத்தில் விமலனர் கரமிலர்
மேற்கொண்டு
ஒழிவருக ருங்கல் மிசையுறு நின்தாள் உற்ற
என் கரமலர் மேற் கொண்டு
இழிவர அடியேன் மனக்கலின்டத்தும் இயைந்துறு
மென்றுனைத் துதித்தேன்
கழி நசை முனிவர் புகழ் திருவானைக் காவகிலாண்ட நாயகியே.

என்று திரிசிரபுரம் மகாவித்துவான் அவர்கள் மனத்தைக் கல்லென உருவகம் செய்து அகிலாண்ட நாயகியிடம் முறையிடுகிறார்.

கல்லேனு மைய ஒரு காலத்தில் உருகும் என்
கல் நெஞ்சம் உருகவிலையே என மனக்கல் பற்றிக் கூறிய தாயுமானவர் "கல்நெஞ் சுருகிக் கண்ணீர் விட்டு உருகினவரையே இறைவன் காப்பான்"

என்பெலாம் நெக்குடைய ரோமஞ் சிலிர்ப் பவுடல்
இளகமனது அழலின் மெழுகாய்

இடையரு துருக வருமழை போலிரங்கியே இரு விழிகள்
நீர் இறைப்ப
அன்பினால் மூர்ச்சித்தவன் பருக்கு அங்ஙனே
அமிர்த சஞ்சீவி போல் வந்து
ஆனந்த மழை பொழிவை உன்னன் பிலாத எனையார்க்காக
அடிமை கொண்டாய் ?

என்கிறார். "கல்நெஞ்சு" என இவ்வாறு எல்லாரும் அழைக்கும் மனம்உருகி மயில்வேற் பெருமானை வணங்கி அவனருள் பெறவே செஞ்சொற் புனைமாலையான பாமாலை சூட்டுகின்றார். வாடக்கூடிய பூமாலை சாற்றாது வாடாத பாமாலை சூட்டுகிறார். வாடாத மலர் போன்ற திருவடிக்கு வாடாத மாலை சூட்டுவதுதானே பொருத்தம்! நல்ல சொல்லாகிய மலர் எடுத்து பக்தி அல்லது அன்பு நாரிலே கோத்துக் கண்ணீர் விட்டு உருகிச் சாத்துவதன்றோ பாமாலை! வாத ஊரார் இம்மாதிரி மாலை சூட்டியதால் இறைவன் அவரை "மாணிக்கவாசக!" எனத் திருநாமம் சூட்டி அழைத்தனன் என்பர் ஆன்றோர்!

பழுதிலாத சொன்மணியினை பத்திசெய்து அன்பு
முழுதுமாகிய வடத்தினால் முறைதொடுத் தலங்கல்
அழுதுசாத்தும் அன்பருக்கு அகமகிழ்ந்து ஐயர்
வழுவிலாத பேர் மாணிக்கவாசகர் என்றார்.

மாணிக்கவாசகரைப்போலவே உருகிப்பாடி, அழுது முருகனடியடைந்த முனிவரன்றோ நம் அருணகிரி!

உருகி அழுது அபயமடைந்தவரைக் காக்கும் கருணையுருவான முருகன்மீது தான் பாடும் கந்தரனுபூதி சிறந்து விளங்க வேண்டுமென்று விநாயகப் பெருமானை வேண்டிப் பணிகிறார் அருணகிரிநாதர். விநாயக வணக்கம் கூறப்புகும் அருணகிரி, அச்சிறிய பாடலிலும், "முருகனையே" நெஞ்சானுகல் உருகி, வணங்கி அழைத்தால், அருள்புரியும் முருகன்" எனமுருகனின் பெருமையையே பாடுகின்றார். உலகவாழ்வில் திருமணமாகிய பெண் தனது கணவனே தனக்கு யாவும் என எண்ணுகிறாள். மற்ற ஆண்களை அவள் வெறுக்கவில்லை. அண்ணன், மாமன் என்று வேறு உறவு கொண்டாடுகிறாள். அதுபோல், முருகனையே தனது முதல் தெய்வ

மாகக்கொண்ட அருணகிரியார், உலக வழக்கிற்குக் கட்டுப் பட்டு, எடுத்துக்கொண்ட காரியம் நன்கு நிறைவேற, விநாய கனை வணங்க வேண்டுமாதலால், முருகனின் மீது பாடும் கந்தரநுபூதி நூல் அழகாக நிறைவேறும்பொருட்டு தடைகளை யெல்லாம் நீக்கும் தன்மையுள்ள விநாயகனை வணங்குகின்றார்.

'வி' என்றால் இல்லாதது. வேகமில்லாத தன்மையை நிதான குணத்தை விவேகமென்பர். அதுபோல் தனக்கொரு தலைவனில்லாத, நாயகனில்லாத பெருமையுள்ளோன், விநா யகன் என்பர். திரிபுரம் நோக்கிப் புறப்பட்ட சிவபெருமான் விநாயகப் பெருமானை நினையாததால் தேரின் அச்சு முறிந்த தாம். **"முப்புரமெரிசெய்த அச்சிவனுறை ரதம் அச்சது பொடிசெய்த – அதிதீரா"** என்பார் அருணகிரிநாதர். "எவ ராயிருந்தாலும் உன்னை நினையாதவரின் காரியங்களைத் தடை செய்துவிடு. உன்னை எண்ணி வணங்கினால் அவர்கள் காரிய சித்திபெற அருள்செய்"

என்னரேயாயினும் யாவதொன்றெண்ணுதல்
முன்னரே உனதுதாள்முடியுறப் பணிவரேல்
அன்னர்தம் சிந்தைபோல் ஆக்குதி; அலதுனை
உன்னலார் செய்கையை ஊறு செய்திடுக நீ.

எனச்சிவபெருமானே விநாயகருக்கு வரங்கொடுத்ததாகக் கூறுகிறது கந்தபுராணம்.

ஒரு சமயம் சிவபெருமான் மீனாட்சியம்மைக்கு ரகசிய மான வேதப் பொருள்பற்றி உபதேசித்துக்கொண்டிருந்தார். ஏதோ அச்சமும் கவலையும் மேலிட்ட காரணமாக அம்மை யார் சிறிது கவனக்குறைவாக அவ்வுபதேசத்தைச் செவிமடுத் தார். இதுகண்டு கோபமடைந்த இறைவன் "மிகவும் பெரிய பொருளைக் கவனமின்றிக் கேட்டு நம்மை அவமதித்தாய். ஆதலின் ஒரு செம்படவன் வீட்டுப் பெண்ணாகப் பிறப்பா யாக" எனச்சபித்தார். "இந்தப் புத்தகங்களால்தானே இந்த மாதிரியான வருத்தங்கள்!" என்று கூறிக்கொண்டே விநாகப் பெருமான் தன் தும்பிக்கையால் அங்கிருந்த புத்தகங்களை வாரிக் கடலில் வீசினார். முருகப் பெருமான் சிவபெருமானது கரத்திலிருந்த புத்தகத்தைப் பிடுங்கி வீசினார். இதனால் மேலும் அதிகக் கோபமடைந்த சிவபெருமான் "நானும் தேவியும்

தனிமையாகப் பேசிக்கொண்டிருக்கையில் இக்குழந்தைகள் இருவரையும் எமதிடத்திற்கு வர அனுமதித்ததனால் தானே இவ்வாறு நேர்ந்தது. ஆதலில் நீ ஒரு சுறுமீனைகப் பிறப்பாயாக!'' எனச் சபித்து, ''கையிலிருந்த புத்தகத்தைப் பிடுங்கி எறிந்த குற்றத்திற்காக நீ ஒரு ஊமையாகப் பிறக்கக்கடவது'' என முருகனையும் சபித்தார். ஆனால் விநாயகனைச் சபிக்கவில்லை. முழுமுதற் கடவுளான விநாயகனைச் சபித்தால் அது தனக்கே சேரும் என எண்ணிய சிவபெருமான் அவ்வாறு செய்தார்.

வெருவரு செலவின் வேழ முகத்தனை விதித்த சாபப்
பெருவலி தன்னைச் சாரும் பெற்றியால் சாபம் கூருன்

என்கிறது திருவிளையாடல் எழுதிய பரஞ்சோதியின் வாக்கு. இவ்வாறு சிவபெருமானே மரியாதை தந்த தெய்வம் விநாயகப் பெருமான். தடங்கல்களான விக்கினங்களைப் போக்கும் தெய்வமானதால் விக்கினஹரன் எனப்பெயர் பெற்றார். இப்பெருமானைக் கந்தரனுபூதி நன்றாக அமையவேணுமென்று வேண்டி வணங்கிப் பாடுகிறார் அருணகிரி நாதர்.

நெஞ்சக்கன கல்லும் நெகிழ்ந்துருக
தஞ்சத்தருள் சண்முகனுக் கியல் சேர்
செஞ்சொற்புனைமாலை சிறந்திடவே
பஞ்சக்கரவானை பதம் பணிவாம்.

இப்பாடலைப்பற்றி சமீப காலத்தில் எழுதிய என் மதிப்பிற்குரிய ஒரு அன்பர் ''நெஞ்சக்கனகல்'' வெறுங் கூழாங்கல் என விட்டுவிட வேணும். அது அவ்வளவு சுவையுள்ளதல்ல எனத் தெரிவித்துள்ளார். அது அழகான பாடல். கூழாங்கல் அல்ல. குவலயம் போற்றும் முருகனை வணங்கிய அனுபூதி ஆசிரியர் விநாயகப்பெருமானைத் தனது நூல் நன்கு முடிவதற்கு மரபின்படி பாடிய அழகிய ரத்தினக்கல். இவ்வளவு கருத்துக்கள் நிறைந்தது என நான் சிந்தித்தவைகளை எழுதலானேன். இவ்வாறு காப்புச் செய்யுள்பாடி விநாயகனை அருணகிரிநாதர் 51 பாடல்களில் அநுபூதி நூல் பாடி அனைத்துலகும் முருகானந்தம் பெறச் செய்தார். அருணகிரியாருக்கு அருள் செய்து அனுபூதிபாடச் செய்த விநாயகப் பெருமானின் திருவடிகளை வணங்குவோமாக!

வேதமும் காணாத வேதியன்

திரு. ஜெ. மகாதேவன் அவர்கள்,
8, சிங்காரத்தோட்டம் 6வது சந்து,
பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை—21.

ஒரு காலத்தில் அடியார்களின் உள்ளம்கவர் கள்வனாகிய சிவபெருமானைக் கண்டு இன்பம் துய்க்க அவனைத் தேடினர் பலர். உருத்திரர் ஒருபக்கம், நாராயணர் ஒருபக்கம், பிரம்மா ஒருபக்கம் தேடினர். விண்ணவர்க்கு வேந்தனான தேவேந்திரன் தேடுங்கள், தேடுங்கள் எனக் கூறிக்கொண்டே தேடினான். கருடர், காந்தருவர், இயக்கர், பூதர் முதலியோர் வேறொருபக்கம் தேடிக் கொண்டிருந்தனர். மருத்துவர்கள், யோகியர்கள், சித்தர்கள் முனிவர்கள் ஆகியோர் 'சிவ சிவ' என மொழிந்து கொண்டே ஓரிடத்தில் தேடினர். வானுலகில் உள்ள தேவர்கள் எல்லாம் 'தேவ தேவ தேவாதி தேவப்பெருமானே' எனக் கூறிக்கொண்டே பல இடங்களில் தேடினர். இவர்கள் எல்லாம் தம்மனத்தே நான், எனது என்ற முனைப்பு கொண்டிருந்ததால் அந்தர்யாமியாய் நின்ற நிமலனை காணமுடியவில்லை. மனம் சென்றவழியே தேடினர், தோல்வியே கண்டனர்.

இறைவனை எளிதாகக் கண்டுவிடலாம் என்ற அவர்களுடைய கருத்து அழிந்தது. ஆயினும் அவர்கள் சோர்ந்து விடவில்லை. சுலபமான வழி ஒன்றை காண முயன்றனர்.

வேதங்கள் நான்கு. அவை இருக்கு, யஜுர், சாமம், அதர்வனம் என்கின்ற பெயர்களை உடையவை. வேத மந்திரங்களின் சொரூபமாக இறைவன் திகழ்கின்றான்.

> **"நாத விந்துக லாதீ நமோநம**
> **வேத மந்த்ரசொ ரூபா நமோநம**
> **ஞான பண்டித சாமி நமோநம ... ...,"**

என்று ஆண்டவனை அர்ச்சிக்கின்றார் அருணகிரிநாதர். வேதத்தை அறிந்தவன் வேதியன். சிவபெருமானின் திரு வாயில் வேதம் ஒலித்துக் கொண்டிருக்குமாம். அதனால் அவனை "வேதியா, வேத கீதா" என அடியார் அழைத்து இன்புறுவர்.

அகிலாண்டகோடிக்கெல்லாம் தலைவனான இறைவன் வேதங்களுக்கும், வேதியர்களுக்கும் நாயகனே.

"வேத நாயகன் வேதியர் நாயகன்
மாதின் நாயகன் மாதவ நாயகன்
ஆதி நாயகன் ஆதிரை நாயகன்
பூத நாயகன் புண்ணிய மூர்த்தியே."

என்று செந்தமிழால் பாடுகின்றார் அப்பர் அடிகள். வேதத்தின்பால் பெருவிருப்பம் உடையவன் இறைவன் என்பதை உணர்ந்தார்கள், தேடி இளைத்தவர்கள். வேதங்களுக்கு இறைவன் இருப்பிடம் தெரியும் எனத் தேர்ந்தனர். சுயநல முடைய அவர்கள் தாம் தனித்தனியே சென்று வேதங்களின் மூலம் இறைவனைக் காண வேண்டும் என நினைந்து முடிவு செய்து கொண்டனர்.

வேதங்கள் மிகவும் பழையன. இறைவனால் தோற்றுவிக்கப்பட்டவை. எக்காலத்தில் உண்டானது என்பதை எவரும் அறிகிலர். எழுத்து மூலம் இன்றி செவி வழியே உபதேசித்து காத்து வருவதால் சுருதி என்ற பெயரும் அதற்கு உண்டு. அரிய பொருள்களை மறைமுகமாக உணர்த்துவதால் மறை என்ற பெயரும் உண்டாயிற்று. இவ்விதம் சிறப்பு பெற்ற வேதங்களை வந்து அடைந்தனர் உருத்திரர் முதலானோர்.

தனித்தனியே சென்று 'இறைவன் எங்கே?' என்று ஆவலுடன் வேதங்களை வினவினர். அதற்கு அவை, "நாங்கள் இதுவரை இறைவனைக் காணவில்லை. அவனைத்தான் இப்பொழுதும் தேடிக் கொண்டிருக்கிறோம்" என்று வருத்தத்துடன் கூறி புலம்பி நின்றன. மற்றவர்களும் 'காணோம்! காணோம்' என்று அரற்றினர். அந்தர்யாமியாய் நின்ற சிவபெருமான் அவர்களைக் கண்டு புன்னகைத்தான்.

இவ்வினிய வரலாற்றை இராமலிங்க சுவாமிகள் ஒரு பாடலில் கூறுகின்றார். அவ்வழகிய பாடல்:

"உருத்திரர் நாரணர் பிரமர் விண்ணோர் வேந்தர்
உறுகருடர் காந்தருவர் இயக்கர் பூதர்
மருத்துவர் யோகியர் சித்தர் முனிவர் மற்றை
வானவர்கள் முதலோர்தம் மனத்தால் தேடிக்
கருத்தழிந்து தனித்தனியே சென்று வேதங்களை
வினவ மற்றவையும் காணேம் என்று
வருத்தமுற்று ஆங்கு அவரொடு புலம்ப நின்ற
வஞ்சவெளியே இன்ப மயமாந் தேவே."

— *திரு அருட்பா.*

வேதமும் காணாத வேதியனாகிய இறைவன் 'ஈன்ற ஆன் காணா இளம் கன்றாய் அலமந்து ஏங்கும் அன்பர்தமை கலந்து கொளும் அமலத் தேவனாகவும்' விளங்குகின்றான். என்னே இறைவனின் தண்ணருள்! "எத்தனையும் அரியை நீ எளியை ஆனாய், எனையாண்டு கொண்டிரங்கி ஏன்று கொண்டாய்! பித்தனேன், பேதையேன், பேயேன், நாயேன் பிழைத்தனகள் அத்தனையும் பொறுத்தாயன்றே! இத்தனையும் எம்பரமோ? ஐய. ஐயோ எம்பெருமான் திருக்கருணை இருந்தவாறே!" என சிவபிரானின் பெருங்கருணையை நினைந்து உள்ளம் உருகுகின்றார்; திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட திருநாவுக்கரசர் அன்பெனும் பிடியுள் அகப்படும் மலை அல்லவா நம் பரமன்!.

ஆரறிவார் என்ன அனந்தமறை ஓலமிடும்
பேரறிவே இன்பப் பெருக்கே பராபரமே.

— *தாயுமானவர்*

வாழ்க உலகெலாம்.

God's Holy Feet

Saint Ramalinga Swami

[Poet-Saint Sri Ramalinga Swami was born in 1823 in S. Arcot Dist. of Tamil Nad and passed away on 30th January 1874. Born of humble parentage, he was unlettered. But through the grace of Lord Kartikeya, he flowered into a spiritual giant. Transcending all religious barriers, his mellifluous poetic outpourings in Tamil-numbering over 7000-breathe spiritual humanism and scintillating devotion to God. We give below an English rendering of one of them. -Ed.]

My Lord!

I may take any birth among the myriads of lives
I may escape being born at all.
I may enjoy life on earth or in heaven.
I may be afflicted with sorrow.
I may be prosperous.
I may suffer adversity.
I may be wise.
I may be a simpleton.
I may acquire any of the good or the evil of the world.
I may lose any of the good or the evil of the World.
I am be, forsooth indifferent to all these.
But I have one boon to ask of Thee, My Lord!
Design to grant me, O Lord! only the mind that would never forget Thy Holy Feet.

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

PRAYER TO DURGA

Prayers always unto you, O, Devi! You are Vidya and Avidya; pure; absolute Brahman; creator of the universe; Durga and the beloved of Shambhu.

Prostrations unto you, O Mother of gods! You are omnipresent; eternal; without prop; serene; the manifest and unmanifest.

O Lord of gods! You are the power of understanding; bliss; Supreme Brahman. Be pleased unto me and grant my prayer. Adorations unto you.

— Siva Purana.

(முன்பக்கத் தொடர்ச்சி)

O Thou, the Physician that curest the cosmic disease of sorrows and pains by the elixir or Thy loving Grace!

O Thou, the Lord That dwellest in glory in the heart of Reality!

O Thou, the Lord of glorious Wisdom and Grace!

O Thou, the Lord Whose Lotus Feet are fhe Refuge of all!

Design to grant me the mind that would never forget Thy Holy Feet.

[Translated by the late A. Balakrishna]

The above articles are reproduced with the kind permission of the Editor of 'Bhavan's Journal'.

திருச்செந்திலாண்டவன் துணை

திருவாசக அநுபூதி உரை*

(சீகாழித் தாண்டவராயர் அவர்கள் இயற்றியது)

திருச்சிற்றம்பலம்

பிரார்த்தனைப் பத்து

இனி, பிரார்த்தனைப் பத்தாவன:

பொழிப்புரை:— முற்பதிக அடிமையன்பு பெற்று, திருவருட்காட்சி கண்டும் எதிர்தோன்றுது சிவாநுபவமே சுவாநுபூதிகமாக நிட்டை பெறுங்காலம், திருத்தொண்டை அளவளாவி அடியார் உறவே நீங்காப்பெருமை நெறியிது வென அருளிய பேரானந்தமென அநுபவம் காண்க.

483. இனி, சீரடியார் திருச்சபைசந்நிதியில் மவுனானந்த அருட்பணி பெற்றமையைக் கூறும் (தி - ன.) :—

கலந்து நின்னடி யாரோ டன்று வாளா களித்திருந்தேன்
புலர்ந்து போன காலங்கள் புகுந்து நின்ற திடர்பின்னாள்
உலர்ந்து போனேன் உடையானே உலவா வின்பச்சுடர் காண்பான்
அலந்து போனேன் அருள்செய்யாய் ஆர்வங் கூரஅடியேற்கே.

(இ - ள்). ஆண்டவனே! தேவரீர் சீரடியார் நடுவுளாகியே, அன்படிமையாகப் பேச்சிறந்த இன்பமுற விருந்தேன்; அவை திருவருள் எனத்தெரியாது வீணாட் கழிவதாகத் துன்ப வேரான இடரிலுற்று வாடி யெய்த்தேன்; என்னையுடைப் பொருளாக அடிமை கொண்டோய்! ஓர் காலமும் வற்றாத ஞானப் பிரகாசத் திருவருளைக் காண வாடினேன்! திருவருளிரங்கிக் கிருபை செய்ய வேண்டும், திருவடியில் மிகுந்த அன்புடையனாக அடியேனை; — என அருளியதைக் காண்க.

---

* இவ்வரிய நூலைப் பதிப்பித்த சென்னை—திருவான்மியூர், மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் நூல் நிலையத்தாரின் அனுமதிபெற்று இது வெளியிடப் பெறுகின்றது. இதன் விலை ரூ. 13/- ஷை நூல் நிலையத்தில் கிடைக்கும், 20% கழிவு உண்டு.

சீர்காழிச் சட்டைநாதர் மார்கழி மாசம் புழுகு நெய் சாத்து நிதி ரூ 2000

சீர்காழித் திருக்கோயில் மலையுச்சியில் எழுந்தருளியுள்ளவரும், இரணியன் உயிரை மாய்த்த நரசிங்கத்தைப்பிளந்து அதன் எலும்பைக் கதையாகவும் தோலைச் சட்டையாகவும் கொண்டு சட்டைநாதர் என்ற திருப்பெயரோடு விளங்கியருள்பவரும் ஆகிய பைரவமூர்த்திக்கு மார்கழி மாதம் ஒரு வெள்ளிக்கிழமையில் புழுகு நெய் சாத்துவதற்குத் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர் **ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள்** அவர்களால் இந்நிதி நிறுவப்பெற்றது. இது **'சீர்காழிச் சட்டைநாதர் மார்கழி மாசப் புழுகு நெய் சாத்து நிதி'** எனப்பெயர் பெறும்.

2. இதற்குரிய முதற்பொருள் ரூ. 2000/- ரூபா இரண்டாயிரம். இது ஆண்டொன்றுக்கு 7% வட்டி தரக்கூடிய நிலையான முதலீடாகக் கும்பகோணம் ஸ்டேட் பாங்கில் 5 வருடங்களுக்கு முதலீடு செய்யப்பெற்றுள்ளது. பிக்சட் டிபாசிட் நெ. 076313 - தேதி 4—1—1968 - ரூ. 2000/- இந்நிதி நம்மாலும் நமக்குப்பின் உரிமையுள்ளவர்களாலும் பரிபாலிக்கப்பெற்றுவரும்.

3. ஸ்ரீ காசிவாசி சாமிநாத சுவாமிகள் அவர்களால் தரும நிதி நிறுவப்பெற்று ஆடி மாசம் முதல் வெள்ளிக்கிழமையிலும், 2. நம்மால் 22—9—1954 உ தரும நிதி ஏற்படுத்தப்பெற்றுத் தை மாசத்தில் முதல் வெள்ளிக்கிழமையிலும், 26—6—1957 உ தரும நிதி ஏற்படுத்தப்பெற்றுச் சித்திரை மாசத்தில் ஏதாவது ஒரு வெள்ளிக்கிழமையிலும், 8—6—1966உ யிலும் 21—2—1967உ யிலும் தரும நிதி ஏற்படுத்தப்பெற்று முறையே ஐப்பசி, கார்த்திகை மாசங்களில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் சீர்காழிச் சட்டைநாதப் பெருமானுக்குப் புழுகு நெய் சாத்தப்பெற்று வருவதுபோல, இம்மூலதனத்தினின்று கிடைக்கும் வட்டித் தொகையில் நிர்வாகச் செலவுகள் போக எஞ்சியுள்ள தொகையினின்று, சீர்

காழித் திருக்கோயில் மலையுச்சியில் எழுந்தருளிச் சட்டைநாதர், வடுகநாதர், தண்டபாணி, ஆபத்துத்தாரணர் என்ற திருநாமங்களுடன் விளங்கியருளும் ஸ்ரீ பைரவமூர்த்திக்கு ஆண்டுதோறும் மார்கழி மாசத்தில் ஏதாவது ஒரு வெள்ளிக்கிழமையில் புழுகுசட்டம் சாத்தவும் அம்மூர்த்திக்கு வடைமாலை சூட்டிப் பாயசம் நிவேதனம் செய்யவும் ரூ. 100/- ஒரு நூறு செலவு செய்யப்பெறும்.

4. ஷை செலவு போக எஞ்சியுள்ள தொகையில் திருப்பனந்தாளுக்குக் கிழக்கில் அமைந்துள்ள திருலோக்கியில் நமக்குச் சொந்தமான ஸ்ரீ காசிமடத்தில் நம்மால் நூதனமாகப் பிரதிஷ்டை செய்துள்ள காலபைரவ மூர்த்திக்கு மார்கழி மாதத்து ஏதாவது ஒரு வெள்ளிக்கிழமையில் வடைமாலை சாத்திப் பாயசம் நிவேதனம் செய்ய ரூ. 15-00 செலவு செய்யப்பெறும்.

5. வட்டி வரவுக்கு ஏற்பவும் காலநிலைக்கு ஏற்பவும் நம்மால் தயாரிக்கப்பெறும் திட்ட ஜாப்தாவின்படி ஷை சிறப்புப் பூசைகள் நடத்தப்பெற்று வரும்.

6. இவ்வருமானம் வேறு எம்முறையிலும் பயன்படுத்தப்பெறமாட்டாது. இந்நிதி நம்பேரிலும் நமக்குப்பின் உரிமையுள்ளவர்கள் பேரிலும் இருந்துவரும். இம்முதற்பொருள் திரும்பியளிக்கப்பெறின் அதிக வட்டி தரக்கூடிய அரசியல் கடன்தாள்களிலோ அல்லது நிலையான முதலீடுகளிலோ முதலீடு செய்யப்பெறும்.

கலையாரு முத்தமிழ்க் கல்வியும் யோகமும் காசினியில்
நிலையா கியபெருஞ் செல்வமும் நீதியும் நீயருள்வாய்
மலையா சனவடு கேச கங்கால வயிரவனே
தலைமாலை சூழ்புயனே காழி யாபதுத் தாரணனே.

Tirupanandal
Dated 18-1-1968 } (Sd.) *Kasivasi Arulnandi Tambiran*

Registered at the Sub Registrar's office at Tiruvadamarudhur Book No. 4, volume 54, pages 165 to 167 as document No. 2 on 19-1-1968

கலைக்கோயிலில் வரப்பெற்றுக் கொண்ட புத்தகங்களின் விபரம் (தொடர்ச்சி)

தொடர் எண்	புத்தகத்தின் பெயர்	ஆசிரியர் பெயர்
11306	உனது கடமை	(ஸ்ரீ சுவாமி சிதானந்தாவின் பொன் விழா நினைவாக இராசிபுரம் தெய்வீக வாழ்க்கைச் சங்க வெளியீடு.
11307	மகா மந்திரத்தின் மகிமை	By Sri Swami Chidananda (இராசிபுரம் தெய்வீக வாழ்க்கைச் சங்க வெளியீடு.
11308	அன்னைபரா சக்தி	ஸ்ரீ சுவாமி சிதானந்தா, தெய்வீக வாழ்க்கை சங்க வெளியீடு, இராசிபுரம்.
11309	சிராமலைத் தாயுமானுர் அநுபூதி	திருச்சிராப்பள்ளி, ஸ்ரீ மட்டுவார் குழலம்மை சமேத ஸ்ரீ தாயுமானவர் திருக்கோவில், மண்டலாபிஷேக நினைவு வெளியீடு.
11310	Do Do	
11311 to 12	சிராமலைத் தாயுமானுர் அந்தாதி	ஷை ஷை மகாகும்பாபிஷேக நினைவு வெளியீடு.
11313	வார வழி பாட்டு வணக்கப் பாடல்கள்	(பனைசைச் சிவனடியார் திருக் கூட்டம், திருப்பனந்தாள்)
11314	திருவொற்றியூர் ஸ்ரீ தியாக ராஜப் பெருமான் திரு நடனச் சிறப்பு	... ...
11315	சைவாநுட்டான விதியும் விளக்கங்களும்.	ஆசிரியர், சிவ ஸ்ரீ தத்புருஷ தேசிகர் (பாலகவி) தேவகோட்டை

(தொடரும்)